௳

செந்தமிழ்

தொகுதி-கக.] பரீதாபி ௵ தைமீ [பகுதி-ங.

ஐயவினாத்தொடர்விடை.

நமது செந்தமிழ்த் தொகுதி 11-பகுதி 1-இல் ஐயவினாத்தொடர் என்ற தலையங்கத்தின்கீழ், சகோதரரொருவர் தமக்குத் தோன்றிய ஐயவினாக்களிரண்டைத் தெரிவித்திருக்கின்றனர். அவற்றின் முக்கியபாகங்களைமாத்திரம் எடுத்து அடியில் எழுதியிருக்கின்றேன்.

வினா I.

(a) யாப்பருங்கலக்காரிகை ஒழிபியலுள் "அருகிக்கலி" என்ற காரிகையின் உரையில் உரையாசிரியர், "இரணத்தொடைக்கும்" என்ற உம்மையால் ஒழிந்த மோனை, இயைபு, எதுகை, அளபெடை என்னுந் தொடை நான்கிற்கும் இவ்வாறே யொட்டிக்கொள்க; அவை கூடி வழங்குமாறு:—என்று, "கடையே, கடையிணை, பின், கடைக்கூழை, இடைப்புணர்பு" என்றவற்றை முறையே முற்கூறிய நான்கின்பாலுஞ் சார்த்தி "இவற்றிற் கிலக்கியம்" யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க என்றதால் அவ்விருத்தியில் கடையிணையியைபு, பின்னியைபு முதலியவற்றிற்கு உதாரணம் வருமாறெங்ஙனம்? அவையெவை?

(b) "இறுதியியைபு" என்றமையான் விகற்ப இலக்கியம் காட்டுகையில் மோனை, எதுகைகளுக்குக் குறிப்பிட்டிருக்கிறபடி முதற்சீரினன்றோ இறுதியில் வரவேண்டும்? அங்ஙனமாயின், "கடையிணையியைபு"க்கு ஈற்றிலிருந்து இலக்கியம்காட்டி வரவியலும்; ஆனால், "மொய்த்துடன்றவழும் முகிலே பொழிலே" என்பது இணை

*

யியைபுக்குப் பொருந்துமா? "கடையிணையியைபு" என்றலாகாதோ? "வில்லேநுதலே வேற்கண்கயலாம்" என்பது இணையியைபுக்கு இலக்கியமன்றோ? மறுக்கின் ஏன்? காரணம் விளக்கவேண்டுவல்.

வினா II.

(a) திருக்குறள் 532, 534, 246, 199 பாக்களினுள்ள பொச்சாப்புக்கு மறவியென்றே பரிமேலழகியார் உரையெழுதிச் செல்கின்றனர். இதனால் பொச்சாப்பும் மறவியும் ஒன்றென்றே உரையாசிரியர் நினைத்தனர்போலும்; அற்றாயின், நன்னூல் உரியியல் "அறிவருளாசை" என்னுஞ் சூத்திரத்தில் "பொச்சாப்பூக்கமறமதமறவியினைய" என்று உயிர்க்குணத்தில் பொச்சாப்பும், மறவியும் வேறாய் வகுத்துணர்த்துவர் ஆசிரியர் பவணந்தியார்; இரண்டும் வேறென்று கூறியவர் கருத்துடன் ஒன்றென்றே பொருள்கொண்டவர் கருத்துப் பொருந்துமா? வழக்கத்தில் முன்னவரே சான்றாகின்றனர்; இவற்றின் காரணம் வேண்டுவன்.

இவ்விரு வினாக்கட்கு உத்தரம் வருமாறு:—

விடை I.

(a) யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வித்வான் ஸ்ரீ அ. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்று வெளிப்போந்த "யாப்பருங்கலக்காரிகைப்புத்துரையில்" "இரணத்தொடைக்கும்" என்பதினுள்ள உம்மையை எச்சவும்மையாகத் தழீஇ மற்றை நான்கு தொடைகட்கும் கடை, கடையிணை, பின், கடைக்கூழை, இடைப்புணர்பு இவற்றைச்சார்த்தி எழுதப்படாமலிருத்தலைக்காண்க. முன்னர் அச்சிடப்பெற்ற யாப்பருங்கலக்காரிகை யுரைப்பிரதியில் "இரணத்தொடைக்கும்" என்பதினுள்ள உம்மையை எச்சவும்மையாகக்கொண்டு மற்றைத்தொடை நான்குக்கும் கடைமுதலியன நான்கும் சார்த்தி எழுதியிருக்கின்றதெனின், அதற்குச் சமாதானம் மேற்கூறிய யாப்பருங்கலக்காரிகைப்புத்துரையின் முகவுரை, உபக்கிரமணிகைகளைப் படிப்பின், கிடைக்கும். அன்றியும், இயைபுத்தொடை பின்னியைபு இலக்கணம் எவ்வாற்றானும் பொருந்தாது. இது ஆராயின், தெரியும். ஆகவே, பின்னியைபு முதலிய வருமாற்றையும் அவற்றிற்குரிய உதா

ரணத்தையும் காட்டலாகாமையுணர்க. யாப்பருங்கலக்காரிகையின் பழைய உரையாசிரியர் கூறியபடி யாப்பருங்கலவிருத்தியில் காட்டியிருக்கக்கூடுமெனின் அது அவ்விருத்தி அச்சுவாகனமேறி வந்த பின்னன்றோ உணரக்கூடும். ஈண்டு அதுகிடக்க.

(b) மொய்த்துடன்றவழும் முகிலே பொழிலே என்பது கடையிணை இயைபுக்கு இலக்கியம் ஆகாது; வில்லேநுதலே வேற்கண்கயலாம் என்பது இணையியைபுக்கு இலக்கியம் ஆகாது. என்னை? "இறுதியியைபு" எனலால் இறுதிச்சீரையே முதலாகக்கொண்டு இயைபுத்தொடையின் விகற்பங்களை யெல்லாம் அறிதல் வேண்டும்; மற்றைத் தொடை நான்கன் விகற்பங்களையெல்லாம் முதற்சீரையே முதலாகக் கொண்டு அறிதல்வேண்டும். இவ்வாறு அறிதல் தொன்றுதொட்டு வரும்முறை. இது சொல்லளவன்று; இலக்கியத்திலும் காட்டுவல். அவ்விலக்கியம் அடியில் வருவன.

சிதம்பரச் செய்யுட்கோவை.

(1) (a) † அவரோ வாரார் கார்வந் தன்றே
கொடிக்கு முல்லையுங் கடிக்கரும் பின்றே.

(b) திருமுடியிற் கண்ணியு மாலையும் பாம்பு
திருமார்பி லாரமும் பாம்பு—பெருமான்
றிருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு
பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு.

(2) வண்டுஞ் சுரும்பு ஞிமிறுங் குடைந்தார்ப்பத்
தண்டே னிறைக்கு மிதழி நறுங்கண்ணி
யெண்டோண்முக் கண்ண னிமையம் புனேமன்றி
லண்டர்கள் கண்களிப்பத் தொண்ட ரகங்குளிர்ப்ப
நின்றாடு மாடற் குருகா திருத்திரால்
வுன்றிண் மறலி புடைத்துக் கொடிதுடைக்கு
மன்று முருகீர் கொல்லாம்.

---

† இக்குறியிட்ட பாட்டுமாத்திரம் தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியலில் எழுத்தடியியைபுக்குக்கூறிய உதாரணப்பாட்டாம்.

(3) வானே நிலனே கனலே மறிபுனலே
யூனே யவ்வூனி னுயிரே யுயிர்த்துணையே
யானேறு மேறே யரசே யருட்கடலே
தேனே யமுதே யளியோங்கள் செல்வமே
யானே புலனு நலனு மிலனன்றே
யானுனு மென்போன்மற் றூர்பெற்று ரம்பலத்துண்
மாநா டகங்காணும் வாழ்வு.

இப்பாக்களுள் முதலிரண்டுபாட்டு அடிகள்தோறும் முறையே ஈற்றெழுத்து, சொல் இவைகள் ஒன்றிவரத் தொடுத்தமையால் அடியியைபுக்கு இலக்கியமாதலும், 2-ம்பாட்டு 2-ம்அடி 1, 2 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் இணையியைபுக்கு இலக்கியமாதலும், ஷைபாட்டு 4-ம்அடி 1, 3 சீர்களின்ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் பொழிப்பியைபுக்கு இலக்கியமாதலும், 3-ம்பாட்டு 1-ம்அடி 1, 2, 3, 4 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் முற்றியைபுக்கு இலக்கியமாதலும், ஷை பாட்டு 2-ம்அடி 1, 2, 4 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் கீழ்க்கதுவாயியைப்புக்கு இலக்கியமாதலும், ஷை பாட்டு 3-ம்அடி 1, 2, 3 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத்தொடுத்தமையால் கூழையியைபுக்கு இலக்கியமாதலும், ஷைபாட்டு 4-ம்அடி 1, 3, 4 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் மேற்கதுவாயியைபுக்கு இலக்கியமாதலும், ஷை பாட்டு 5-ம்அடி 1, 4 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத்தொடுத்தமையால் ஒரூஉ இயைபுக்கு இலக்கியமாதலும் உணர்க. இங்கு மேற்கூறியாங்கு இறுதிச்சீரையே முதலாகக்கொண்டு கணக்கிடப்பட்டதைக் கருதுக.

விடை II.

(a) ஆசிரியர் பரிமேலழகியார் 532, 534, 246, 199 திருக்குறட்பாக்களிலுள்ள பொச்சாப்புக்குப் பொருளாகக்கொண்ட மறவியின் பொருள்வேறு; ஆசிரியர் பவணந்தியார் உயிருடைப் பொருள்களின் குணப்பண்பு உணர்த்துவான் தாமருளிய "அறிவருளாசை" என்பதை முதலாகக்கொண்ட சூத்திரத்திலுள்ள மறவியின் பொருள் வேறு. இவற்றுள் முன்னையது மறத்தலேயும் பின்னது மறந்து

செய்யுங் குற்றத்தினையும் உணர்த்தும். இங்ஙனம் மறவியென்னுஞ் சொல் இருபொருள் உணர்த்துவதை "வழுக்குமறவியு மயர்ப்பு மிவ றனு, மறப்பென்கிளவி மறனுமாகும்" எனவும், இழுக்குஞ் சோர்வும் புன்மையு மிகழ்ச்சியும், வழுக்குங்கீழு மறவியும் பொல்லாங்கும், பொச்சாப்பென்பது புகலுமப் பெயர்க்கே" எனவும் வரும் பிங்கலந் தைச் சூத்திரங்களாற்றெளிக. இவற்றால் இரண்டாசிரியர் கருத் தும் மாறுபடாது பொருந்துமாறு காண்க. இனி, பொச்சாப்புக்கு மறப்பென்னும் பொருளுளதோவென ஐயநிகழின் அதனைப் "பொச் சாப்பு மறவிதீதாம்" என்ற 11-வது நிகண்டுரைகொண்டு ஒழிக்க.

இங்ஙனம்

அ. முத்தையமுதலி,

உபாத்தியாயன்,

பரங்கிப்பேட்டை.

உ

ஐயவினாவுக்கு விடை.

சென்ற கார்த்திகை மாசிகச் செந்தமிழ்ப் பத்திரிகையிலே யாப் பருங்கலக் காரிகையில் வரும் இயைபுத்தொடை விகற்பத்திலும், பொச்சாப்பு என்பதற்குப் பரிமேலழகர் கூறிய பொருளிலும் ஐயப் பாடுற்று "நச்சுவார்க்கினியர்" என்பாரொருவர் வினவுவாராயினர். இயைபுத்தொடையையும், பொச்சாப்பு என்பதன் பொருளையுஞ் சிறிது விளக்குவாம். விளக்கவே அவரையப்பாடும் அகலும் என் பது அநுமிதியாகும்.

இறுதியியைபு.

"இறுதியியைபு" என்பது யாப்பருங்கலக் காரிகையிலே இயை புத்தொடைக்கு இலக்கணங் கூறிய சூத்திரம். யாப்பருங் கலக்காரி கையிலே வருஞ் செய்யுள் கட்டளைக்கலித்துறையாயினும் இலக்க ணங் கூறும் பாகமெல்லாஞ் சூத்திரம் போன்றிருத்தலால் இதனையுஞ்

சூத்திரம் என்றும். இறுதி(ஒன்றின்)இயைபு = அடியினிறுதியானது மற்றையடியிறுதியோடாவது, அவ்வடிக்கணுள்ள சீரிறுதிமற்றைச் சீரிறுதியோடாவது ஒன்றத் தொடுக்கப்படுமாயின் அத்தொடை இயைபுத்தொடை எனப்படும். ஒன்றின் என்பது "எழுவாயெழுத் தொன்றின்மோனை" என்புழி நின்று கொணர்ந்து கூட்டியுரைக்கப் பட்டது. இங்ஙனங் கூட்டியுரைக்குமாறு வைத்துச் செல்லுதல் சூத் திரக்காரர் வழக்கு. வடநூலாரும் "ஸூத்ரேஷ்வத்ருஷ்டம் பதம் ஸூத்ராந்தராதாக்ருஷ்ய பூரணீயம்" என்பர் "ஒரு சூத்திரத்திற் காணப் படாதபதம் மற்றைச் சூத்திரத்தினின்று சேர்த்து நிறைக்கத்தக்கது" என்பது இதன் பொருள்.

இறுதி என்றது அளவடியின் இறுதிச்சொல்லினையும், எழுத் தினையுஞ் சுட்டி என்க. அது "எழுவாயெழுத்தொன்றின்" என்பத னாலும் "மொய்த்துடனுமியைபிற்கு" எனக்காட்டிய உதாரணச் செய் யுளானுந் துணியப்படும். இறுதியியைபு என்பது அடியியைபு, இணை யியைபு முதலிய எட்டினுஞ் சென்று இயைபு என்பதனை விளக்கி நிற்கும். அடியியைபினிலக்கணம் "அடிதோறு முதல்" என்பதனாற் கூறப்பட்டது. இதனுரை யாப்பருங்கலக் காரிகையிற் கூறினோம். ஆங்குக் காண்க. இணையியைபுமுதலிய ஏழும் "இருசீர்மிசையிணையா கும்" என்னும் செய்யுளாற் கூறினார்.

உதாரணம்.

மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே (இணையியைபு.)
மற்றத னயலே முத்துறழ் மணலே (பொழிப்பியைபு.)
நிழலே யினியத னயலது கடலே (ஒரூஉ வியைபு.)
மாதர் நகிலே வல்லே யியலே (கூழையியைபு.)
பல்லே தளவம் பாலே சொல்லே (கீழ்க்கதுவாயியைபு.)
வில்லே நுதலே வேற்கண் கயலே (மேற்கதுவாயியைபு.)
புயலே குழலே மயிலே யியலே (முற்றியைபு.)

இச்செய்யுளிலே எண்வகையியைபுத் தொடையும் வந்திருக் கின்றது. இஃது எழுத்தியைபு. இயைபாய் நின்ற எழுத்து லே என் பது. இயைபு என்பது இயைந்து நிற்றலுடையது எனப்பொருள்

படும். லே என்னும் எழுத்து அடிதோறும் இறுதியில் ஒன்று தலையும் அறிக. அதுவே அடியியைபு.

ஆசிரியர் இறுதி என்றது அளவடியினிறுதியை; என்பதை இவ்வுதாரணத்திலே பொழிப்பியைபு, கூழையியைபு முதலியவற்றின் உதாரணம் நன்கு புலப்படுத்திற்று. "மாதர் நகிலே வல்லே யியலே" என்புழி "இயலே" என்பதை முதற் சீராகக் கொள்ளாக்கால் "மாதர்" என்பது ஈறிலியாய் நின்று கூழையாவது எப்படி? கூழை என்பது குறு என்பதனடியாகப் பிறந்த பெயர். அசதியின் பெயராகிய கூளி என்பதும் இது போன்றது.

அடி, இணை, பொழிப்பு முதலிய எட்டும் காரணக் குறிகள். அடி—முதலினிற்பது. இணை—இரண்டாய் வருவது. பொழிப்பு—பொலிவுடையது. இறுதி என்பதற்கு முதற்சீரினிறுதி எனக்கொள்ளின்; குறியீடுந் தவறும்! அவர்கருத்துந் தவறும்! நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற் கூறிய உரையுந் தவறும்! உதாரணமுந் தவறும்! ஆதலின் இறுதி என்பதற்கு முதற் சீரினிறுதி என்பது கொள்ளற்க. கொள்ளாதொழியவே "முகிலே பொழிலே" என்பது கடையிணை எனக்கொள்ளாமையும் அமையும். கடையிணையியைபுக்கு வேண்டுமாயின்; "தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்" (நாலடி) என்புழித் "தம்மை யிகழ்ந்தமை" என்பன போல வருபவைகளைக்கொள்க. இயைபுக்கு அளவடியினிறுதியே முதலாகக் கொள்ளுங்கால் "தம்மை யிகழ்ந்தமை" என்பது கடையிணையாய் வரற்குத் தடை யாது? இங்ஙனமே மற்றையுதாரணங்களையுங் காண்க.

பொச்சாப்பு.

பொச்சாப்பு என்பதற்குச் சூடாமணி நிகண்டுகாரர் மறத்தல் என்பர். பிங்கலநிகண்டுகாரர் குற்றம் என்பர். தொல்காப்பியர் "பொச்சாப்பு என்பது அற்றப்படுதல்; அஃதாவது பாதுகாத்துச் செல்கின்ற பொருட்கண் யாதானும் ஒரு நிகழ்ச்சியான் இடையறவுபடுதல்," (மெய்ப்பாட். கஉ) "பொச்சாப்பு - கடைப்பிடியின்றி நெகிழ்ந்திருத்தல்" (மெய்ப்பா. உகூ.) என்பர். இப்பொருள்களுள்ளே மறவி என்னும் பொருளை விலக்கி மற்றையவற்றுள் ஏற்புடைய தொன்மை நன்னூலில் வரும் பொச்சாப்பு என்பதற்குப் பொருளா

கக்கொள்க. பரிமேலழகர் ஆண்டைக்கேற்ப மறவி என்னும் பொருள்கொண்டார். பொச்சாப்பு என்பது பலபொருளொருசொல்.

விம்மல்+ஆப்பு = விம்மாப்பு எனவும், ஏமம்+ஆப்பு = ஏமாப்பு எனவும் புணர்ந்து நின்றதுபோலப் பொச்சம்+ஆப்பு = பொச்சாப்பு எனப் புணர்தலாயிற்று; என அநுமிதிபெறுகின்றும். பொச்சம் - பொய்யுடையது. பொய் - உள்ளீடில்லது, பொந்துபோன்றிருப்பது. பிங்கலநூலாரும் பொய் என்பதனை மரப்பொந்தின் பெயர்களுள் ஒன்றுகவைப்பர். ஆப்பு - ஆதல். "சிதைவின்றி யெச்சத்திற்கேமாப்புடைத்து" (வள்) என்புழி ஆப்பு என்பது ஆதல் என்னும் பொருட்டாதலும் அறிக. பொச்சாப்பு = உள்ளீடிலதாதல்.

கவர்+பு = கப்பு எனவும், உவர்+பு = உப்பு எனவும் விகாரப்பட்டு முடிந்ததுபோலப் பொய்+சு என்பனவும் விகாரப்பட்டுப் பொச்சு என முடிந்து பின்னர் அம்முப்பெற்றுப் பொச்சம் என நிற்பதாயிற்று. கப்பு - பிளவு, கவருடையது. "கப்புடைநாவினுகருலகமும்." (இராமாயணம்) உப்பு - உவர்ப்புடையது.

யாம் இறை பயப்பனவாக இங்கே எழுதியவைகளைச், சங்கத (ஸம்ஸ்கிருத) மொழியினுந், தமிழ்மொழியிலும் நுண்ணிய ஆராய்வுடைய பண்டிதராகிய செந்தமிழ்ப் பத்திராதிபரவர்களும் நோக்கித் தமது கருத்தினை உரைத்தல் நன்றாகும். அவருரைக்குங்கால் அபூர்வமான பல பொருள்கோள்களைக் குறிக்கோள் செய்தற்கு இடனுகும். அவர்கள் எழுதிய காவியம், ஐயவினுவின் விடையுரை, பரிசோதனத்தொடர் என்னும் இலேக்கியங்களிலே எத்தனையோ தொடர்களின் மெய்ப்பொருள்கள் காணப்பட்டு விபரீதங்களை நீக்கின. பரிசோதனத்தொடர் விடயத்திலே அவர்கள்போல யாமும் பிரீதியுடையோம். அது முன்னர்ச் செந்தமிழிலே யாம் எழுதிய "பிங்கலநிகண்டு" "வாதவூரர்புராணம்" முதலிய இலேக்கியங்களால் விளங்கும்,

சுன்னுகம்
பரிதாபிஹு
தை மீ

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

ஸ்ரீ:

இயைபுத்தொடை முடிவுரை

சென்ற கார்த்திகை மாதத்துச் செந்தமிழில் தச்சநல்லூர் "நச்சுவார்க்கினியன்" என்பவரால் வெளியிடப்பட்ட ஐயவினுத் தொடருக்குப் பரங்கிப்பேட்டை கவர்ன்மெண்டு பாடசாலை யுபாத்தியாயர் ஸ்ரீமான். அ. முத்தைய முதலியாரெழுதிய "ஐயவினுத்தொடர்விடை" என்னும் "பொருளுரை" (விஷயப்பிரவசனம்) ஒன்றும், பின்னும் அத்தொடருக்கே சுன்னுகம் வித்வான், ஸ்ரீமான், அ, குமாரசுவாமிப் பிள்ளையவர்களெழுதிய "ஐயவினுவுக்கு விடை" என்னும் "பொருளுரை" ஒன்றும் வந்துள்ளன.

இவ்விரண்டும் ஒரேவிடயம் பற்றிய "பொருளுரை" யாயிருப்பினும், ஒருவரையொருவர் விரவாத விருவர்கருத்து மொற்றுமை பெற்றிருப்பதுகண்டு, ஐயுற்ருர் நன்கு தெளிதற்குபகாரமாகு மென்பதுகருதியும், அரியவிடயங்களைப் பரியாலோசித்தெழுதும் பண்டிதர்களுழைப்பு வீணுகாமற் பயன்படச்செய்ய விரும்பியும் இப்பகுதியுள் அவ்விரண்டு முடன்சேர்க்கப்பட்டுள்ளன.

அவ்விரண்டு "பொருளுரை" களும், வினவப்பட்ட பொருளின் ஐயமொழியுமாறு விடைகள் பலவும் விரித்தளித்து நின்றன.

அவற்றுள், ஸ்ரீமான், பிள்ளையவர்களெழுதிய "பொருளுரை" யின் முடிவில் "பத்திராதிபர் நோக்கித் தமது கருத்தினையுரைத்தல் நன்ருகும்" என்றெழுதிய வாக்கியத்தின் முன்னும், பின்னும் யான் கொள்ளப்பெருத சில அடையும், தொடையும் அளிக்கப்பட்டுள்ளன. அவை, யெனக் கேலாதனவாயினும், பெரியோர்வாக்காதலின், "நிறைமொழி" யாகுக.

"கற்றமற்றேர் கண்டு களிக்குமள வென்னுரைகள், குற்றமற்ற வென்று குறிக்கொள்ளே" ணுகி, யானெழுதிய லேக்கியங்களைப்பற்றி, அவர்களெழுதிய வாக்கியங்களே யெனது ஐயுறவினை நீக்கிநின்றன. இது நிற்க.

ஐயவினுத் தொடரில், இயைபுத் தொடைபற்றியும், பொச்சாப்புப்பற்றியும் வினவியோ ரையுற வொழியுமாறு பிள்ளையவர்களாற் செவ்வனம் விடையளிக்கப்பட்டிருப்பவும், "பத்திராதிபர் நோக்கித் தமது கருத்தினைப்புரைத்தல் நன்முகு" மென்ற விருப்பத்தை வீணுக்காது அவர்கள் சொல்லியவற்றுள்ளே சில சொல்லுகின்றேன்.

இயைபுத்தொடை விடயத்தில்,ஐயவினுத்தொடரின் ருற்பரியம், மற்றைத்தொடையும் தொடைவிகற்பங்களும் போல இயைபுத்தொடையும், அதன் விகற்பங்களும் முதற்சீர்தொட்டு அவ்வச்சீரின் இறுதி பற்றி வருதல் கூடாதா? வென்பதே.

அங்ஙனம் வருதல்கூடும், கூடாது என்னுமிரண்டனுளொன்றை அத்தொடையினிலக்கண முரைக்கும் சூத்திரப்பொருள் கண்டு துணிய வேண்டும்.

அச்சூத்திரம் யாதெனில் "எழுவாயெழுத்தொன்றின்" என்னும் காரிகையிலுள்ளது. அக்காரிகை வருமாறு:—

(க) எழுவாயெழுத்தொன்றின்மோனை;

(உ) இறுதியியைபு;

(ங) இரண்டாம், வழுவாவெழுத்தொன்றின் (மாதே) எதுகை;

(ச) மறுதலைத்த, மொழியான்வரினுமுரண்;

(ரு) அடிதோறுமுதன்மொழிக்கண், அழியாதளபெடுத்தொன்றுவதாகுமளபெடை (யே). என்பதாம்.

இக்காரிகையில் இருபிறைக்கோட்டுள்,தொகைகொடுத்துக்காட்டப்பட்டன ஐந்தும் ஐந்துசூத்திரங்களாம். நூல்களுள் ஒருசெய்யுளிற் பல சூத்திரங்களும் வரப்பெறு மென்பதனை, "கருவிதொகுதி கம்நிறைந்தியலும்" என்னும் உரிச்சொல்லியற் செய்யுளை "இரண்டு சூத்திரம்" எனவும், "கவர்வுவிருப்பாகும் சேரேதிரட்சி, வியலென் கிளவி யகலப்பொருட்டே" என்னும் செய்யுளை "மூன்று சூத்திரம்" எனவும் சேனவரையர் கூறியவாற்ருனு முணர்க.

சூத்திரங்களுக்குப் பொருளுரைக்குமிடத்து, அதற்குவேண்டும் சொற்களில்லையாயின் முன்னும் பின்னுமுள்ள சூத்திரங்களிற் பொருள் பயந்து தொடர்ந்து வந்தியையுஞ் சொற்களை யதிகாரத்தாற் கொணர்ந்து கூட்டி யொருதொடராக்கிப் பொருளுரைக்கவேண்டும்.

முற்சூத்திரங்களினின்றும் வேண்டுஞ் சொற்களைப் பிற்சூத்திரங்களிற் கொண்டுகூட்டிமுடித்தலை "உத்கர்ஷாநுவர்த்தி" என்றும், பிற்சூத்திரங்களினின்றும் முற்சூத்திரங்களுக்கு வேண்டும் சொற்களைக் கொண்டுகூட்டி முடித்தலை "அபகர்ஷாநுவர்த்தி" என்றும் கூறுவர் வடநூலார். இவ்விரண்டினையும் அதிகாரத்துளடக்குவர் தமிழ்நூலார். உபதேசத்தானும் ஊகத்தானும் அதிகாரச்சொற்க ளறியத்தக்கன. ஊகம் - ஞாபகவுணர்வு. இக்காரிகையும், அடுத்தகாரிகையும் தொடையிலக்கணங்களையே யுணர்த்துவன. "இருசீர்மிசை" யென்னும் காரிகையே தொடை விகற்ப விலக்கண முணர்த்துவதாம்.

இங்கெடுத்துக்கொண்ட காரிகையிலுள்ள முதற் சூத்திரம் "எழுவாயெழுத்தொன்றின் மோனை." என்பதாம். இதற்கு இக்காரிகையிலுள்ள இறுதிச் சூத்திரமாகிய "அடிதோறு முதன் மொழிக் கணழியாதள பெடுத்தொன்றுவதாகுமள பெடை" என்பதினின்றும் "அடிதோறும்" என்னும் சொல் முற்சூத்திரங்கடோறும் சென்றியைந்து பொருள்பயக்குமா றதிகரிக்கப்படும். படவே, "அடிதோறும் எழுவா யெழுத்தொன்றின் மோனை" என வொருதொடராக்கிப் பொருளுரைக்கு மாறுகாண்க.

இனி, "இறுதியியைபு." என்பதே இரண்டாவது சூத்திரம். இதனால் இயைபுத்தொடை யிலக்கண முரைக்கப்படும். இதன்பொருள் என்னவென்பதே இங்குஆராயத்தக்கது. இச்சூத்திரத்துள் "இறுதி, இயைபு" என இரண்டுசொல்லே யுள்ளன. இவற்றுள் இறுதி யென்னும் சொற்பொருள் நிலம், நீர், தீ, கால், என்பனபோல்வதொரு தனிப்பொருளாகாது யாதேனுமொன்றனைப் பற்றிநிற்கும் சினைப் பொருளா யிருத்தலால் அதன்பற்றுக்கோடாகிய பொருட்பெயரின்றி வழங்கிற் பொருள்தோன்றாமையால், அப்பெயரின்றி வழங்குதல் கூடாது.

அப்பெயர் யாதெனில்? இச்செய்யுளினிறுதிச் சூத்திரத்தி னின்று முதற் சூத்திரங்காறும் அதிகரிக்கப்படும் "அடிதோறும்" என்பதே. அதனையதிகரித்துக்கூட்டி இறுதி யென்பதற்கு அடையாக்கி விசேடிக்கவேண்டும்; விசேடிக்கவே, "அடிதோறுமிறுதி" எனவொருதொடராய், அடிகளினிறுதியாகிய சினையெனப் பொருள் படும். அச்சினையும் எவனென வுற்றுநோக்கின் எழுத்து, சொல் என்னு மிரண்டுமெனப் புலப்படும். அவற்றுள் இங்குக் கொள்ளப் படுவதியாதெனில்? அடியிறுதி யெழுத்தென்றேனும், அடியிறுதிச் சொல்லென்றேனும் விதந்தோதாமையால் அவ்விரண்டுமே அடியிறுதியாகக் கொள்ளப்படும் என்க. அடிக்கு அசை, சீர்களு முறுப்பாத லாலவற்றையுங் கொள்ளல் வேண்டு மன்றோ வெனின்? இச்சூத்திர முள்ள செய்யுளி லெடுத்தாளப்பட்டன எழுத்தும், சொல்லுமேயாத லால் அவைகிட்டியனவாம்; ஏனை அசையும், சீரும் இங்கு எடுத்தாளப்படாமையால் அவைகிட்டாதனவாம். "கிட்டியது, கிட்டாததென் னுமிரண்டனுள் கிட்டியதே கொள்ளத்தகும்" என்னும் வழக்குப் பற்றி இங்கு அசை சீர் முதலிய வுறுப்பைக் கொள்ளாது எழுத்து, சொல் என்னு முறுப்பையே கொள்ளல்வேண்டும். இங்ஙனங்கொள் ளுதலே முறையென்பதை 'உபஸ்திதாநுபஸ்திதயோருபஸ்திதஸ்யைவ க்ருஹணம்' எனவும் "ஸஹசரிதாஸஹசரிதயோஸ்ஸஹசரிதஸ்யைவ க்ருஹணம்" எனவும் வழங்கும் வடநூல் வழக்கானும் உணர்க.

இங்ஙனங் கூறியவாற்றால் இச்சூத்திரத்துள்ள "இறுதி" என்னும் சொல்லுக்கு அடிகளினிறுதியுறுப்பாகிய எழுத்து, சொல் என்னு மிரண்டுமே பொருளாகுமென வுணர்க.

இனி இயை யென்னுஞ் சொல்லை ஆராயின், சொல்லின் முடிவி னப்பொருண்முடித்த லென்னுந் தந்திரவுத்தி கொண்டு, இயை தலுடையது இயைபு என்னும் பொருள் தோன்ற வைத்தமையால் இயை யிலக்கணத்துக்கு வேண்டும் இயைதல் என்னும் பொருள் தானே பெறப்படும். ஆதலால், ஒன்றின் என்பது அதிகரிக்கவேண் டாதாயிற்று. இயைதல், ஒன்றல், ஒத்தல் என்பன ஒருபொருட் சொற்கள். மேலைச் செய்யுளினின்றும் "தொடை நாமம் பெறும்" என்னும் தொடரை அதிகரித்து இறுதியிற் கூட்டி, அடிதோறும்

இறுதி யெழுத்தேனும் சொல்லேனுமியைவது. இயைபுத்தொடை யென்னும் பெயர் பெறும்” என்பதே சூத்திரப்பொருளாம்.

இனி இங்ஙனமன்றி “எழுவாயெழுத்தொன்றின்மோனை” என் பதினின்றும் எழுத்தொன்றின் என்பதை அதிகரித்து ‘இறுதி’யென் பதன் பின்கூட்டி, அடிதோறும் இறுதி யெழுத்தியையின் இயைபு. என எளிதிற் பொருள்கொள்ளிற்படுமிழுக்கென்னையெனின் ? எழுத் தொன்றின் எனவே, ஒன்றுதற்கு எழுத்து அடையாய் நிற்றலால் அது பிறிதினியைபு நீக்கி நிற்கும். நீக்கவே, இறுதிமொழியொன் றல் இலக்கணமின்றாய்முடியும்; முடியவே அவ்வியாத்தி என்னும் குற்றமாம். அடைமொழி பிறிதினியைபுநீக்கத் தகுதியில்லாத விடத் தே தன்னோ டியைபின்மைநீக்கிநிற்ப தல்லது, தகுதியுள்ளவிட த்தும் அதனை நீக்காதிராது. ஆதலால் இறுதிச்சொல்லையும் நிமித்த மாகக்கொள்ளும் ஆசிரியர்கருத்தொடு மாறுபடுமென்பதைப் பின் வரும் ஞாபகத்தாலுமுணர்க.

“எழுத்தொன்றின் என்பது” இயைபுத்தொடைச் சூத்திரத் துக்கு அதிகரிக்கப்படாதென்பதை யுணர்த்துதற்கே அடுத்த எது கைத்தொடைச் சூத்திரத்துள் எழுத்தொன்றின் என ஆசிரியர் மறித் து மெடுத்தோதுவாராயினர். அதிகாரமுளதேல் வேண்டாது அதனை மறித்து மெடுத்தோதமாட்டார்; வேண்டாதிருப்பவும், மறித்து மெ டுத்தோதியதே இயைபுத்தொடைச் சூத்திரத்துக்கு எழுத்தொன் றின் என்பதன் அதிகாரமில்லையென்பதற்கு ஞாபகமாமெனவுணர்க.

இனி “அடிதோறும் முதன்மொழிக்கண்” என்னும் இறுதிச் சூத்திரத்திலுள்ள மொழியென்பதை அதிகரித்துரைப்பினும் முற் கூறிய குற்றந்தங்கும்; ஆதலால் அதற்கும் இதில் அதிகாரமில்லையென விலக்குக.

மோனை முதலிய வேனைத்தொடைகளை முன்னும் பின்னும் எழுவாயுறுப்புப்பற்றியே விதித்து, அதற்கு மறுதலையாகிய இறுதி யுறுப்புப்பற்றி இயைபுத்தொடை விதிக்கப்பட்டமையால் அதன் றொ டைவிகற்பங்களும் ஏனைத் தொடைவிகற்பங்களி னிலைக்களத்தின் மறுதலை நிலைக்களமே பெற்று விபரீதப்பட்டிருக்குமென்பது சொல்

லாமலே பெறப்படும். இங்கு விபரீதமாவது இறுதிச்சீர் முதலும் முதற்சீர் இறுதியுமாகவைத் தெண்ணப்படுதல்.

இதுவன்றியும், இருசீர்மிசையென்னும் காரிகையுரையுள், "சீர் முழுது மொன்றின் முற்றுமென்றது, வருசீரென்று சிறப்பித்தவத னால் இணைமோனை முதலிய முப்பத்தைந்து தொடைவிகற்பமும் அளவடிக்கண்ணே வழங்கப்படுமென்பதூஉம், இணையியைபு முதலா கிய ஏழுவிகற்பமும் இறுதிச்சீரே முதற்சீராகக்கொண்டு வழங்கப்படும் என்பதூஉம் அறிவித்தற்கெனக் கொள்க." என்றுரைத்திருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

அடியியைபு என்பதற்கு முதற்கண்வருமியைபென்பது பொரு ளன்று; அடிகளைப் பற்றுக்கோடாகப் பற்றிவரு மியைபு என்பதே பொருளாகும். அடிமோனை, அடியெதுகை முதலிய வேனைத்தொ டைகளுக்கு மிவ்வாறே பொருளுரைக்கவேண்டும்; அவையும் அடி தோறும் என்று விசேடிக்கப்பட்ட இலக்கணம்பெற்று அடிகளைப் பற்றுக்கோடாகப் பற்றியிருப்பது கண்டுகொள்க. இன்னும், தொடை விகற்ப வகைக்குத் தொடைவகை பிரதானமாதலால் அப் பொருள் கருதி அடியென்னும் அடை கொடுக்கப்பட்டதெனினும் அமையும். பிரதானம் - முதன்மையுடையது. இதனால் இயைபுத்தொடையுட் பிரதானம் யாது? அது அடியியைபு. என அடியியைபுக்குப் பொரு ளுரைக்கப்படும். ஏனைத் தொடைகளுக்கும் இப்பொருள் பொருந் தும். இவ்வாறு பொருளுரைக்கவே, அடியியைபு ஏனைத் தொ டைபோல முதற்கண்வருதல் கூடாதா? வென்னும் ஐயுறவும் தானே அழியும்.

இன்னும், முரண்டொடைச் சூத்திரத்துக்கு இறுதிச் சூத்தி ரத்தினின்றும் முதல் என்பதையும் அதிகரித்து, "அடிதோறும் முதல் மறுதலைத்த மொழியான்வரினுமுரண்" எனக்கூட்டிப்பொருளு ரைத்தலால் முரண்டொடைக்கு முதன்மொழியே நிலைக்களமென் பது பெறப்பட்டது; அவ்வாறே யியைபுத்தொடைச் சூத்திரத்துக் கும் முதற்கண் என்பதனை அதிகரித்துக் கூட்டியுரைக்கிற் படுமிழுக் கென்னையெனின்? அதனால் முதன்மொழியிறுதியே நிமித்தமாகு மல்லது முதற்சீரினிறுதி நிமித்தமாகமாட்டாது. ஆகவே ஓரெழுத்

தொருமொழி முதன்மொழியானவிடத்து இலக்கணத்துக்கு மோனைத்தொடையில் அதிவியாத்தியும், ஏனையிடத்து எதுகைத்தொடையில் அதிவியாத்தியும் வருமாதலால் அது பொருந்தாது. அன்றியும் அவ்வா றதிகரிக்கக் கூடாதென்பதற்கு ஞாபகமாகவே முதற்கண் என்பதை அதிகரிக்க வேண்டாத எதுகைத்தொடைச் சூத்திரத்துக்கு முன்வைத்ததென வுணர்க.

இதன் முற்பரிய மென்னவெனில், எழுத்தே நிமித்தமாகும் மோனையெதுகை யிலக்கணத்துக்கும், மொழியே நிமித்தமாகும் முரணிலக்கணத்துக்கும் இடையே சிங்கநோக்காகவன்றோ? எழுத்தும் மொழியும் நிமித்தமாகும் இயைபுத்தொடையிலக்கண மிருக்கற்பாலது; அதனை அம்முறை வைப்பின், அடுத்த முரணிலக்கணத்துக்கு அதிகரிக்கப்பட்ட முதற்கணென்பது இதற்கும் அதிகரிக்கக்கூடும்; அதனை அதிகரித்துக் கூட்டாதொழிக்கவேண்டும்; என்பதையுணர்த்துதற்கே அவ் வதிகாரம் வேண்டாத எதுகை மோனைத் தொடையிலக்கணங்களுக்கிடையே இயைபிலக்கணத்தை முறைபிறழவைத்து மறைத்தனர் என்பதாம்.

ஆசிரியர் ஏனைத்தொடைகள்போல இயைபுத்தொடைக்கும் அடிமுதலைப்பற்றி முதற்சீரை நிலைக்களமாக எளிதிற்கொண்டு, அடியிறுதியைக் கடையியைபுக்கு நிலைக்களமாக்காது, விபரீதமாக அடியிறுதியே அடியியைபுக்கு நிலைக்களமாமாறு வலிந்து சூத்திரஞ்செய்யக் காரணமென்னவெனில்? தொல்லாசிரியர் துணிபுபற்றியதென்க.

தொல்லாசிரியர்தமக்குமே அத்துணிவுபிறக்கக் காரணமென்னவெனில்? இது நன்கு வினவுதலாம். தொடை, தொடைவிகற்பமென்னு மிருவகையுள், தொடை முதன்மையுள்ளதாயும், தொடைவிகற்பம் முதன்மையில்லதாயுமிருத்தலால் அவற்றின் வேறுபாடு தோன்றத் தனித்தனி பொதுவிலக்கணமுள்ளதாகவேண்டும். அவ்விலக்கணம் கூறுங்கால்,அடியைநிமித்தமாகப் பற்றிவருவது தொடையென்றும், சீரை நிமித்தமாகப்பற்றிவருவது தொடைவிகற்பமென்றும் கூறி, இருவேறு வகையாகப் பகுக்கப்படும். படவே, மோனை எதுகை முரண் அளபெடை என்னும் நான்கு தொடைக்கும் சீர்

நிமித்தமாதலின்று; அடிமுதலே நிமித்தமாகின்றது. அவ்வாறு இயைபுத்தொடைக்கும் அடிமுதலே நிமித்தமாகக்கொள்ளின் மோனைத் தொடையாய் முடியும். மோனையின் வேறாக்குதற்கு முதற் சீரினிறுதியை நிமித்தமாகக் கொள்ளவேண்டும். கொள்ளவே சீர்பற்றி வரும் தொடைவிகற்பத்தின் பாற்படுவதல்லது, சீர்பற்றாது அடிபற்றியே வரும் தொடைவகைப்பாற்படுவதின்றாம். ஆதலால் அடிமுதற் சீரையொழித்து, சீர் என்று கருதல்வேண்டாத அடியிறுதியே அடியியைபுத்தொடைக்கேற்ற நிலைக்களமாகு மென்பது கருதியே தொல்லாசிரியர் இலக்கணங்கூறத் துணிந்தனரென்க. இதனானே அடிகளின் முதற்சீரினிறுதிபற்றிப் பிறக்கும் இயைபினைக் கடையியைபெனத் தொடைவிகற்பத்தின்பாற் படுத்தமையுங் கண்டுகொள்க.

அடியிறுதியும் சீரிறுதியன்றோவெனின்? அது சீரிறுதியுமாயினுமாக; அடியிறுதியென்னத் தடையில்லை. அடியிறுதியாயிருத்தலே இங்கு இலக்கணத்துக்கு நிமித்தம். அது சீரிறுதியின்றியொழியினும் ஒழிக; இலக்கணத்துக் கிழுக்கின்று. ஆதலால், சீரென்பது கருதாதுவைத்தே, அடிதொறு முதலெழுத்தொன்றுவது மோனை; அடிதொறு மிரண்டாமெழுத்தொன்றுவ தெதுகை; அடிதொறு முதன்மொழி மறுதலைப்படுவது முரண்; அடிதொறு முதன்மொழி யளபெடுப்ப தளபெடை. என மற்றைத்தொடைகளுக்கு இலக்கணமுரைப்பதுபோல, அடிதொறுமிறுதியெழுத்தேனு மொழியேனு மியைவது இயைபு; என இயைபினிலக்கணமுமுரைத்தற் கியையுமென்பது கருதியே தொல்லாசிரியர் அடியிறுதியையே இயைபுத் தொடைக்கு நிலைக்களமாகக் கொண்டனர் என்க.

இங்ஙனம் கொண்டமையால், ஏனைத்தொடைவிகற்பங்களேபோல இயைபுத்தொடை விகற்பமும், தம்முள் தலைமைவாய்ந்த இயைபுத் தொடை பிறக்குமிடமாகிய அடியிறுதிச்சீரை முதலாகவும், அதன் மறுமுனையை யிறுதியாகவும் கொண்டே அடைவேதோன்று மென்பதாம்.

ஆதலால் இயைபுத் தொடைக்கு அடிமுதற்சீர் நிலைக்களமாகாதெனவும், இறுதிச்சீரே நிலைக்களமாமெனவும், மற்றைத்தொடை

யின் விபரீதநடை யுடைமையால் "முகிலே பொழிலே" என்பது இணையியைபுக்குப் பொருந்தியவுதாரணமெனவும், அது கடையிணை யியைபாகாதெனவும், "வில்லே நுதலே வேற்கண் கயலே" என்பதே பாடமாதலால் அது இணையியைபுக்கிலக்கியமன்றெனவும், மேற்கதுவா யியைபாமெனவும். "மொய்த்துடன்றவழும் முகிலே பொழிலே" என்பதே யிணையியைபாமெனவும், கடையிணையியைபுக்கு இலக்கியம் பிள்ளையவர்கள்காட்டிய "தம்மை யிகழ்ந்தமை" என்பது பொருந்து மெனவும், "தொய்யிலும் பொன்னே சாயலும் மயிலே" என்பதைப் பின்னியைபுக் கிலக்கியமாகக் காட்டுதல் கூடுமெனவும், கொள்ளக் குறையில்லை.

பிள்ளையவர்கள் இயைபுத்தொடைக்கும், அதன் விகற்பவகைக் கும் இறுதியை முதலாகவைத்து ஏனைத்தொடைகளினுந் தொடை விகற்பங்களினும் விபரீதமாக வுதாரணங்களை விளங்கக் காட்டியது மிகத் தெளிவுடையது. யாப்பருங்கல முதலிய நூல்களின்றுற்பரிய மும் அன்னதே.

கடையியைபு முதலியவற்றிற்குப் பின்வரும் யாப்பருங்கல வுதா ரணங்களும் காண்க.

"மாமலர்நெடுங்கண் மானேக்கினவே
பொன்மலர்வேங்கைபுணர்முலைச்சுணங்கே
நறுமலர்க்கூந்தலுமறலே
செறுமலர்க்கமலமலைத்ததுமுகமே"

"இது கடையியைபு" எனவும்

"புயலும்போலும்பூங்குழற்பிழம்பே (கடையிணை இயைபு)
தொய்யிலும்பொன்னேசாயலுமயிலே (பின்னியைபு)
சிலையேநுதலுமுறுவலுமணியே (இடைப்புணரியைபு)

குயிலும்பாலுமாம்பலுமொழியே (கடைக்கூழையியைபு)
அரிமதர் நெடுங்கணுமயிலே (அடியியைபு)
வரிவளைத்தோளிமுகமுமோர்மதியே" (இதுவுமது)

"இதனுள் கடையிணையியைபு முதலாகிய நான்கும் வந்தவாறுகண்டு கொள்க" எனவும், இவை யாப்பருங்கல விருத்தியுட் கண்டன. இவற்றையும் பிள்ளையவர்கள் காட்டிய உதாரணங்களுடன்கூட்டி, இயைபுத்தொடை விகற்பங்கள் ஏழும், ஐந்தும் எஞ்சாதுவந்தவாறு கண்டு கொள்க.

இனி, மறவி பொச்சாப்பு என்னுமிரண்டற்கும் மறத்தல் பொருளாம் என்பது எல்லோர்க்கு மொப்பமுடிந்ததேயாதலாற் பரிமேலழகருரை புரைபடுவதன்று. நன்னூலுட் கூறும் பொச்சாப்புக்கே வேறுபொருள் வேண்டும். அது உயிர்க்குணமாகவும் வேண்டும். பிங்கலந்தை சொல்லும் "குற்றம்"என்பதைக் கொள்ளின், அஃதுயிரைப் பற்றி நிற்பதொரு தனிக்குணமாகாது அழுக்காறு, மறவி வெகுளி முதலிய விழிகுணத்துளொன்றும். அவை யெடுத்தோதப்பட்டமையால் அப்பொருளை யொழித்து, "தொல்" மெய்ப்பா, 26 சொல்லும் கடைப்பிடியின்றி நெகிழ்ந்திருத்தல்(உபேக்ஷை) என்னும் உயிர்க்குணமே பொச்சாப்பென்னும் சொல்லுக்குப் பொருளாகக்கொண்டு கூறினர் நன்னூலார் என்பது பொருந்தும். ஆதலாற் பரிமேலழகருரைக்கும், பவணந்தி முனிவருரைக்கும் விரோதமில்லையென வுணர்க.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

தமிழ்மொழியும் சிவநெறியும்.

13-10-12 மாலை $4\frac{1}{2}$ மணிமுதல் $6\frac{1}{2}$ மணிவரை.

திருவனந்தபுரம் புத்தன் சந்தையிலுள்ள சைவப்பிரகாசசபைக் கட்டிடத்தில் திருவாங்கூர் பென்ஷன் ஹைக்கோர்ட்டு ஜட்ஜி திவான் பகதூர் கனம் A. கோவிந்தப்பிள்ளை யவர்கள் B. A. B. L. F. M. U. அக்கிராசனத்தின் கீழ்ச் சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் கௌரவப்பிரசங்கியாகிய மறைத்திருவன். சுவாமி. விருதை.சிவஞான யோகிகள் "தமிழ்மொழியும் சிவநெறியும்" என்ற விஷயமாய் ஒரு அரிய பிரசங்கமியற்றினர். அதன் சாரம்.

(தமிழ்மறை வரலாறு.)

ஆங்கில நூலாசிரியரிற் பெரும்பாலார் இந்துமகாசமுத்திரத்தி னுள்முழுகியிருக்கும் பூமியில் (Submerged land=Lemuria)தான் முதற்கண் மக்கட்பகுப்பார் தோன்றினரென்று கூறுகின்றனர். அதற் கேற்ப மக்கள் முதற்கண் ஒலிக்கக்கூடிய இயல் ஒலிகளே தமிழ் மொழியிலிருக்கின்றன. முன்னர் வடக்கட்குமரியாற்றுக்கும் தெற் கெல்லையாகிய பஃறுளியாற்றுக்கும் இடையே கிழமேல் நீண்டுகிடந்த 7000மைற் பரப்புள்ள நிலம் தமிழகம் என்னப்பட்டிருந்தது. அதில் தென்பகுதியில் தென்மதுரையிருந்தது. அதில் தலைச்சங்கம் கி. மு. 9990 முதல் 5550 வரையும், இடைச்சங்கம் கி. மு. 5550 முதல் 185) வரையும், கடைச்சங்கம் கி. மு. 1850 முதல் கி. பி. 10 வரை யும் இருந்ததாய்க்குறிக்கப்படுகின்றன. கி. பி. 90வரை இருந்ததாய்க் குறிப்பாருமுளர்.

மக்கள் தோன்றிய காலமுதற்றோன்றி வளர்ந்து நிலைபெற்றி ருந்த தமிழ் மிகச்சீர்தேற்றமடைந்த தலைச்சங்க காலத்தில் அகத்தி யர் தம்பெயரால் ஒரு பேரிலக்கண நூலியற்றினர். அக்கருத்தைக் கம்பராமாயணம் அகத்தியப்படலம் "என்றுமுள தென்றமி ழியம்பி

யிசை கொண்டான்" என்றகவி விளக்குகின்றது. ஆகவே இற்றைக்கு 11900 ஆண்டுகட்குமுன்னரே தமிழ் மிகச் சீர்தேற்றமடைந்திருந்ததாய்ப் புலப்படுகின்றது. டாக்டர் ஆப்பர்ட் (Dr. Oppert) புரொபசர், இ. எச். சேஸ் (Prof, E. H. Sayce) முதலிய ஆங்கில சரித்திராசிரியர் சின்ன ஆசியாவில் (Asia Minor) எருதூர் (Ur of Erudu) ஆட்சி கி. மு. 8000 ஆண்டுகட்கு நெடுநாள் முன்னிருந்ததாயும், பின்னர் சாலடியூர் அல்லது சாலடியரூர் (Ur of Chaladea) ஆட்சி இருந்ததாயும், அதன்பின் அங்காடியர் (Accadians) பாபிலோனியர் (Babylonians) ஆட்சிகள் இருந்ததாயும் கூறுகின்றனர். எருதூர் சாலடியூர் என்ற பெயர்கள் தமிழாயிருத்தலானும், சாலடியர் அங்காடியர் மொழிகளில் தமிழ்ச்சொற்கள் மிகக்கலந்திருப்பதானும், இன்னும் பற்பல ஆதாரவுகளாலும் 10000 ஆண்டுகட்குமுன்னரே தமிழ்மொழி மெசபட்டோமியா என்ற சின்ன ஆசியாவிலும் பரவியிருந்ததாய் உறுதிப்படுகின்றது.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் தமிழ்மொழியின் வரலாற்றில் 8000 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்க்கல்வெட்டைப்பற்றி யெழுதியிருக்கின்றனர்.

வடமொழி வான்மீகராமாயணத்தில் சீதையைப்பார்க்க அனுப்பப்பட்ட அநுமாருக்குத் தெற்கிலுள்ள பாண்டியன் ஆண்டிருந்த கவாடபுரத்தைப்பற்றிக் கூறப்பட்டிருத்தலானும், அக்காலத்திலிருந்த ஜமதக்கினி முனிவருக்குப் பரசுராமர், திரணதூமாக்கினி என் றிருமக்களிருந்தனர் என்றும், அவருள் திரணதூமாக்கினி என்ற தொல்காப்பியர் தொல்காப்பியமென்ற இலக்கண நூலியற்றினர் என்றும் பல சரித்திரங்கள் கூறலானும், இடைச்சங்கத்தின் பிற்பகுதியில் தொல்காப்பியர் இருந்ததாய்ப் புலப்படுகின்றது. ஜமதக்கினிமுனிவர்காலத்தை வேதகாலம் (Vedic Era) என்ற ஆங்கிலநூல் இற்றைக்கு 3558 ஆண்டு என்றும் வேறுசிலர் 4000 என்றும் கூறுகின்றனர்.

வைவசுவதமனு காலத்தில் ஒரு பிரளயமுண்டானதாயும், அவர் இட்டதெய்வம் மீன்வடிவாய் வந்து கூறியபடி கப்பலில் ஏறியிருந்து நீர்ப்பெருக்குக் குறைந்தபின் பிறங்கி வைகையாற்றின் கரையில் புது

நகர் இயற்றி ஆண்டதாயும், அவன் திராவிட அரசனென்றும், சுக்ல யஜுர்வேதத்தில் சதபதப்பிராமணம் அதன் உபப்பிரம்மணங்களாகிய பாரதம் பாகவதம் லிங்கபுராணம் முதலியவற்றால் வெளிப்படுகின்றது. அது இடைச்சங்கமிருந்த கவாடபுரம் கடல் கொள்ளப்பட்டுப் போந் திருந்த மீனக் கொடியுடைய முடத்திருமாறன் கடைச்சங்கமிருந்த மதுரை கண்ட சரித்திரமென்று கருதத்தக்கதாகின்றது. தலைச்சங்க இடைச்சங்கச் செய்திகள் இறையனார் அகப்பொருளுரை சிலப்பதி காரவுரைகளிற் கூறப்பட்டுள்ளன.

மேற்கூறிப் போந்தவற்றால் 12000 ஆண்டுகளாய்த் தமிழ்நாடு சீர்தேற்றமடைந்திருந்ததாகத் தீர்மானப்படுகிறது.

தலைச்சங்கத்தில் மக்கட்குறுதிபயக்கும் நூல்களைத் திரிபுர மெரித்த விரிசடைக்கடவுளும் குன்றமெறிந்த முருகவேளும் அவர் மாணுக்கராகிய அகத்தியனார் கௌதமனார் வான்மீகனார் மார்க்கண்ட னார் முதலிய சங்கப்புலவர்களும் இயற்றியருளினர். அவை இருக்கு எசுர் சாமம்போன்ற தலையாய வோத்துக்கள் எனத் தொல்காப்பியம் "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். முதலூழியில் தலைச்சங்கம் இருந்த தென்மதுரை கடல்கொள்ளப் பட்டமையால் இப்பொழுது முதற் சங்க நூல்களிற் சில சூத்திரங்களும் பாக்களும் ஆங்காங்கு உரை களிற் காணப்படுகின்றன. இடைச்சங்க நூல்களும் பாக்களும் சிற் சில இன்னும் காணப்படுகின்றன. முற்காலத்து ஐந்திணைமாக்களும் அவ்வத்திணைக்குரிய புத்தேள்களின் வணக்கமும் அனைவர்க்கும் பொதுவாம் சிவவணக்கமும் இருந்து வந்தன. முற்காலத் திருவிட ருள் சாதிவேற்றுமை இருக்கவில்லை. ஆனால் ஒப்பு அரும்பொருள் வினை யாழோர்கூட்டம் என மூன்றுவேட்டல்க ளிருந்தன.

1. ஒப்பு=பெண்கோடற் குலத்தான் வேண்டக் கொடுத்தல்.

2. அரும்பொருள்வினை=தலைவன் வல்லமை தெரிந்து எல்ல வரு மறியத் தலைவி விரும்பி மாலையிடல். (இதுவே சுவயம் வரம்)

3. யாழோர் கூட்டம்=தலைவன் தலைவி இருவர் ஒத்தார் தாமே கூடுங் கூட்டம். (இதுவே காந்தர்வமணம்)

பிராமணாதி நான்கு வருணங்களும் ஆரிட முதலிய மணங்களும் ஆரியர் இந்நாட்டிற்கு வந்தபின் பவராற் கற்பிக்கப்பட்டன. அக்கருத்துக்களைக் கபிலரகவல் "நாற்குலச் சாதிஇந் நாட்டினீர் நாட்டினீர்" தொல்காப்பியம் "பொய்யும் பிசியும் புகுந்த பின்றை, யையர் வகுத்தனர் ஆரிட மென்ப" என்ற மேற்கோள்களுணர்த்தி நிற்கின்றன. வடமொழி ஆகமங்களில் சைவமறையோர்க்கு முன்னோராகிய அகத்தியர் கௌதமர் கௌசிகர் காசிபர் பரத்துவாசர் ஐவர்க்கும் சிவனார் சதாசிவமூர்த்தமாய் இருந்து சிவாகமங்களை உரைத்தனர். அவர் உலகுக்குரைத்தனர் என்று கூறப்படுவதையும், முதற் சங்கத்தில் சிவன் அகத்தியர் முதலியர்பால் தமிழ்த் தலையாயவோத்துக்கள் தோன்றினவென்பதையும் திருமந்திரம் "சதாசிவந் தத்துவ முத்தமிழ்வேதம்" என்று கூறினமையையும், வடமொழியாகமங்கள் பூஜாகாலங்களில் திருவிடகானஞ் செய்யத்தக்கது; விழாக்காலத்தில் திக்குப்பலியில் தமிழ்ப்பண்கள் ஓதத்தக்கன என்று கூறப்படுவதையும், அவ்வாறே இன்றும் தமிழ்மறைகள் ஓதப்படுவதையுங் கருதி நோக்கில் தமிழ்மறைகள் (ஆகமங்கள்) முதற்சங்ககால முதலிருந்து பண்களோடு ஓதப்பெற்று வந்தனவென்று நன்கு விளங்கும். தமிழ்மறை நீண்டகாலமாயுளது. தமிழ்நாட்டில் நுட்பமான மனவிரிவும் தத்துவநூல்களும் சிவஞானமும் என்றுமுள்ளன. சிவக்கடவுள் உலகனைத்துக்கும் பொதுவாந் தெய்வமேயாயினும் அவனை அறியுநெறியும், அவன் வணக்கமும் தமிழகத்தும் ஏனைத் தமிழ்நாட்டினுமே தொன்றுதொட் டுண்மையால் சிவன் "தென்னாடுடையான்" "பாண்டிநாடே பழம்பதியாகவும்" என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றன. ஆதலால் சிவநெறி என்னப்படும் சுத்தாத்வைத சைவ சித்தாந்தம் தமிழ்நாட்டுக்கும் அதில் வழங்கும் தமிழ்மொழிக்குமே தொன்றுதொட்டுரியது. இப்பொழுது அது தமிழினின்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுவதுபோல முற்காலத்தில் பிறமொழிகளிலெழுதப்பட்டதன்றி அம்மொழிகளினே தோன்றியதன்று. இக் கருத்துக்களை உமாபதி சிவாசாரியர் திருமறைகண்ட புராணத்தில் "அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடு மதுபோலன் றிதுவென்று முளதாம்" இது=தமிழ்மறை. கம்பநாட்டாழ்வார் இராமாயணம் அகத்தியப்படலத்தில்,

உழக்குமறைநாலினுமுயர்ந்துலகமோதும்
வழக்கினுமதிக்கவினினும்மரபினுடி
நிழற்பொலிகணிச்சியணிநெற்றியுமிழ்செங்கட்
டழற்புரைசுடர்க்கடவுடந்ததமிழ்தந்தான்.

என்று தமிழ்மறையின் தொன்மையும் மேன்மையும் வழியுங் கூறப்பட்டன.

திருமந்திரம். அருளுடைமையின் ஞானம் வருதல். 2.

அவிழுமனமும்மாதியறிவுந்
தமிழ்மண்டலமைந்துந்தத்துவமாமே.

திருவாசகம் அகவல் 4-165.

"எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி"

திருவாசகம். அகவல் 4-164.

"தென்னாடுடைய சிவனே போற்றி"

திருவா. அகவல் 2-90.

"தென்பாண்டி நாட்டானே"

திருவா. 2-118.

"பாண்டிநாடேபழம்பதியாகவும் பத்திசெய்யடியரைப்
பரம்பரத்துய்ப்பவன்"

திருவா. திருவம்மானை 8-10.

"தண்ணார்தமிழளிக்குந்தண்பாண்டிநாட்டானை"

என்று எல்லாம்வல்ல பரம்பொருளைச் சிவன் என்ற பெயரால் வணங்கும் சைவநெறி தோன்றிய பழம்பதி பாண்டிநாடென்றும், அதில் நுட்பமான கருத்துகளும் தத்துவநூல்களும் தேவதேவன் ஞானமும் உளவென்றும் விளக்கப்பட்டது. இக்கருத்தை டாக்டர். ஜி. யூ. போப்பையர் (Dr. G. U. Pope. M. R. D. D.) அவர்கள் "சைவசித்தாந்தநூல் திருவிடர் அறிவின் சிறந்த விளைவு" = (The Saiva Siddhanta Philosophy is the choicest product of the Dravidian Intellect) என்று கூறிவற்புறுத்தினர்.

சிவன் என்ற சொல்லுக்குத் தமிழ்ப்பகுதி கூறில் வளர் என்ற பகுதி அத்தன்மையைக் குறிக்குங்கால் வளம் என்றும் அதையுடையானைக் குறிக்கும்பொழுது வளன் என்றும் ஆவதுபோலச் சிவண் என்ற பகுதி = பொருந்து என்ற பொருளுடைமையால் எங்கும் பொருந்தியிருத்தல் = (வியாபித்திருத்தல்)தன்மை சிவம் எனப் படுகின்றது. எங்கும் பொருந்தியிருப்பான் (சருவ வியாபகனாகிய பரமாத்மா) சிவன் என்று கூறப்படுகின்றனன்.

சுவேதாசுவதரம் 3-11 "ஸர்வகதஶ்ஶிவ:" "எங்கும் அடைந்துள்ளவன் சிவன்"

திருவாசகம் அகவல் 3-28. "அனைத்தனைத்தவ்வயினடைந்தோன்"

தலைச்சங்கத்துத் தோன்றிய தலையாய வோத்துக்கள் தென்மதுரை கடல்கொள்ளப்பட்ட முதலூழியிலும், எஞ்சியிருந்தவை இடைச்சங்கமிருந்த கவாடபுரம் கடல் கொள்ளப்பட்ட இரண்டாவதூழியிலும் கடலுண் முழுகினமையால், இப்போதுள்ள தமிழ்மறையாகிய தேவார திருவாசகமும் திருமந்திரமும் அவதாரமூர்த்திகள் வாயிலாய்வெளிப்போந்தன. அவற்றுள் தேவாரம் திருமுறைகண்ட அபயகுலசேகரசோழன் சிதம்பரந் திருமதிலுள் வைக்கப்பட்டிருந்தமை கண்டு பெரும்பகுதி கறையானுண்டிறந்தமைக்கு வருந்த "இக்காலத்துக்கு வேண்டியனவே எஞ்சியிருக்கின்றன" என்றெழுந்த வானிழல் மொழி இக்காலமனிதர்க்கறியற்பாலன வல்லாத பொருளுடையன கறையானுலுண்ணப்பட்டன வென்றுணர்த்தி நிற்கின்றன. அதுவே முதற்சங்க காலத்துத்தோன்றிய தலையாயவோத்துக்கள் கடல் கொள்ளப்பட்டமைக்குக் காரண மென்றுணரக் கிடந்தமை யோர்க.

வடமொழிமறை பலராற்கவரப்பட்டமையும், விண்டுமச்சாவதார மெடுத்துக்கொணர்ந்தமையும்,வேதங்கள் திரயியென்னப்பட்டுப் பின்னர் நான்காயினமையும் "அநந்தா வை வேதா:" "மறைகள் அளவில" என்னப்பட இப்பொழுது நான்கே யுண்மையையும், கற்பங்கள் தோறும் மீண்டு மீண்டும் மறைகள் தோன்றுமென்ற உபநிடதங்களின் கருத்தையும் உற்று நோக்கில் பிரளயத்தில் தமிழ்மறை வேறுபட்டமை யியல்பெனத் தோன்றும். திருமந்திரத்தில் சதாசிவமூர்த்தமாயிருந்து சிவன் தமிழ் வேதத்தை யுணர்த்தினர். என்றும்

("சதாசிவந்தத்துவ முத்தமிழ்வேதம்") சிவன் உமையார்க் கருளினர் என்றும், அதை நான்சொல்கின்றேன் என்றும் ("நீலாங்கமேனி நேரிழையாளொடு, மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின், சீலாங்கவேதத்தைச் செப்பவந்தேனே") மலரவன், இந்திரன் முதலிய தேவர்களும் தமிழ்மறைபாடி யாடினர் என்றும் (திரு. நா. தே. "நாவார்ந்த மறைபாடி நட்டமாடி நான்முகனு மிந்திரனு மாலும் போற்ற") நந்திகேசுரர் முதலிய சிவகணநாதரும் தமிழ்மறை கூறியதாயும், திருமூலரோடு நந்திப்புத்தேளிடம் தமிழ் மறைகற்று அருள்பெற்ற உடன் மாணக்கர் சிவயோகமாமுனி, பதஞ்சலி, புலிக்காலர், முன்னையர் எழுவர் என்றும், திருமூலர்பாற் றமிழ்மறைகற்ற மாணக்கர் மாலாங்கன் இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன் காலாங்கி கஞ்சமலைச் சித்தர் என்ற எழுவர் என்றும், தமிழ் மறை யாசிரியரும் வழியும் அதுகற்ற மாணக்கரும் ஆங்காங்குக் குறிக்கப்படுகின்றனர். மகேந்திரமலையில் சிவனர் ஆகமங்களை அருளிச்செய்தனர் என்று திருவாசகம், அகவல் 2. 9—10. "மன்னு மாமலை மகேந்திர மதனிற் சொன்ன வாகமந்தோற்று வித்தருளியும்" என்ற சுருதிவிளக்குகின்றது. மகேந்திரம் தமிழோங்கிவளர்ந்து வழங்கிய முதற் கழகமிருந்த நாட்டின் கண்ணுளதாதலால் அவண்டோன்றிய ஆகமமும் (சிவனர் அம்மைக் குரைத்த தமிழ் ஆகமத்தை யான் கூறுகின்றேனென்று திருமூலதேவர் குறித்தபடி) தமிழெனப்பதொருதலை.

அம்மலை கவாடபுரத்துக்குத் தெற்கினுண்மையும், முதலூழியில் தென்மதுரை கடல்கொள்ளப்பட்டமையால் அநுமார் சென்றபொழுது அதன் ஒருபகுதியும் கடலுண் மூழ்கியிருந்தமையும் வான்மீகராமாயணம் கிட்கிந்தாகாண்டத்திற் கூறப்பட்டுள்ளது. தேவார திருவாசகத் தமிழ்மறையை உரைத்தோர் முருகக்கடவுள் அவதாரமாகிய திருஞானசம்பந்தர் நந்திகேசுரர் அவதாரமாகிய மாணிக்கவாசகர் முதலிய நால்வர். அத் தமிழ்மறையைச் சிவாலயமுனிவர் நாடோறும் ஓதத் திரட்டித் தந்தவர் அகத்தியனர்.

திருமூலநாயனர் சிவனர் அடியார்க் கறிவுறுத்தருளிய சிவாகமங்கள் அளவிறந்தனவென்றும், அவற்றுட்சிறந்தன இருபத்தெண் கோடி நூறுயிரம் என்றும், அவற்றின் பொருளைச்சுருக்கி யான் 3000

திருமந்திரங்களாகக் கூறுகின்றேன் என்றுஞ் சொல்லியிருக்கின்றனர். அவற்றின் சுருக்கம் இருபத்தெட் டாகமங்கள். இப்போதுள்ள காமிகாகமத்தில் முதற்கண் ஒவ்வோராகமத்தின் பாத்தொகை இஃதென்று கூறப்பட்டுளது. அக்கணக்கின்படி அக்காமிகாகமத்திலாவது வேறு ஆகமங்களிலாவது பாக்களிருக்கக் காண்கிலம். ஆதலால் அவை முன்னிருந்த தமிழ் ஆகமங்களின் தொகை என்றும், அவை வடமொழியி லெழுதப்பட்டபொழுது சுருக்கி யெழுதப்பட்டனவென்றும் கருதத்தக்கதாகின்றது. வடமொழி யாகமங்கள் திக்குப்பலியிலும் நித்திய பூஜாதிகளிலும் தமிழ்ப்பாக்களையும் தமிழ்ப் பண்களையும் ஓதப்பணித்தமையும் வடமொழி யாகமங்களில் ஆகமம் முதலிய சொற்களுக்கு ஆ = பசு, க = பதி, ம = பாசம், ஆதலால் பசுபதி பாசங்களை யுணர்த்தும் நூல் ஆகமம் எனப்படும்; என்றிவ்வாறு தமிழ்ப்பகுதிப்பொருள் கூறப்படலும், இக்கருத்தை நிலையுறுத்தும்.

இந்தியாவில் 8000, 10000 ஆண்டுகட்கு முந்திய பல சிவாலயங்களிருக்கின்றன. நெடுநாள் முந்தியிருந்து மண்ணுண் மறைந்திருந்த சிவாலயங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவை வடமொழி யாரியர் இந்நாட்டுக்கு வருதற்கு முந்தியகாலத்திற் கட்டப்பட்டனவென்பது தெளிவு; ஆதலால் அப்பொழுது சிவத்தளிகளியற்றல் வழிபடல் முதலியன தமிழாகமங்களின் வழித்தாய்ச் செய்யப்பட்டன வென்பதுந் தெளிவே. வேதம் ஆகமம் என்பன ஒரு பொருட் கிளவிகளாதலால் திருமூலதேவர் முன்னர்ச் "சீலாங்கவேதத்தைச் செப்பவந்தேனே" என்று சொல்லிப் பின்னர்ச் "சிந்தை செய்தாகமஞ் செப்பலுற்றேனே" என்று கூறினர்.

மேற்கூறிய கருத்தை,

அண்ணலருளாலருளுஞ்சிவாகமம்
எண்ணிலிருபத்தெண்கோடிநூறுயிரம்
விண்ணவரீசன்விழுப்பமுரைத்தனர்
நண்ணிநின்றப்பொருளேத்துவனே.

என்ற திருமந்திரம் விளக்கினமைகாண்க.

இந்துமகாசமுத்திரத்தில் மூழ்கிய இடத்திற் றோன்றியிருந்து பல்கிப்பெருகிய மனிதரி லொருதொகுதி மெசபட்டோமியாவிற் சென்றிருந்து பெருகிப் பல பகுதிகள் வெவ்வேறிடங்களிற் செல்ல மற்றொருபகுதி இலத்தின் கிரீக்கு, எபிரேயம் பகுதிகளாய்ப் பிரிந்து போக எஞ்சிய வடமொழி யாரியர் மத்திய ஆசியா மேற்குப்பகுதி யிலுள்ள துருக்கித்தானத்திற் றங்கிப் பின்னர்க் கைபர்க் கணவாய் வழியாய் இந்தியாவுட் புகுந்தனர்.

அவர் இந்தியாவுக்கு வந்து 5000 ஆண்டுகளாகின்றனவென்று ஆங்கில ஆசிரியர் பலர் கூறுகின்றனர். வேறுசிலர் சில நூற்றாண்டுக ளுயர்த்திக் கூறுகின்றனர். மற்றொருவர் 6000 ஆண்டுகளென்று கணக்கிடுகின்றனர். இருக்கு முதலிய மூன்று வேதங்கள் கி. மு. 3101 முதற்றொடங்கிப் பல இருடிகளால் 2500 ஆண்டுவரை யெழு தப்பட்டனவென வேதகாலம் (The Vedic Era) முதலிய நூல்கள் கூறுகின்றன. புரோபசர் எச். ஜாகோபி (Pro. H. Jacobi) என்பவர் வேதத்திற் குறிக்கப்படும் கிரஹநிலையை ஆதரவாய்க்கொண்டு கி. மு. 4500க்கும் 2500க்கும் இடையிற்றோன்றிய தென்கின்றனர். புரோப சர் பா. க. திலகரும் அவ்வாறே கூறுகின்றனர். தமிழ் அறிவு நூல் களின் கருத்துக்களையும் சிவன்காதைகளையும் தமிழர் ஒழுக்க வழக்கங் களையும் தமிழ்நாட்டுக் காதைகளையும் ஓர்ந்த வடமொழிவல்ல அறி ஞர் வடமொழிவேதம் ஆகமம் புராணம் இதிகாசங்களை வரைந்தனர். அன்னவர் மெய்ஞ்ஞானமும் சிவானுபூதியுமுடைய உத்தமராதலின் அவைகளுஞ்சிறந்த பிரமாணங்களேயாயின. பின்னர்த்தோன்றிய திருஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர் நால்வரும் வடமொழிவேதம் ஆகமம் தமிழ்மறையாகமங்கள் ஆகிய இருபகுதிகளையும் தழுவிய சமரசஞான சித்தாந்திகளாதலால் அவர்கள் சித்தாந்தம் வைதிக சுத் தாத்வைத சைவசித்தாந்த மெனப்படுகிறது. நாமும் அதைத் தழு வினவர்களாதலால் நமக்கும் வடமொழி தென்மொழி வேதாகமங்கள் அளவைகளாயின. தமிழகத்தில் தொன்று தொட்டுள்ள முல்லைத் திணைத்தெய்வமாகிய திருமால்மீது ஆழ்வார்களியற்றிய நாலாயிரப் பிரபந்தமாகிய தமிழ்வேதமும் ஸ்ரீ வைஷ்ணவப் பிராமணராலோதப் பெற்று வருகின்றது. தேவாரம்—"அரியலாற்றேவியில்லை யையனை யாறனார்க்கே" என்றபடி வைஷ்ணவம் தேவி விஷயமாமன்றி உண்மை

யில் வேறுபட்டதன்று சிவசத்திகளுக்கு வேற்றுமையின்மையால். வின்னல்=மலர்தல்=விரிதல் ஆதலால் விண்டு என்பது வின் என்ற பகுதிபடியாய்ப் பிறந்து எங்கும் பரவி (விரிந்து) உள்ளபொருளைக் குறித்து நிற்கின்றது. சிவன் விண்டு என்ற சொற்கள் பொருளானு மொற்றுமையுடைமை காண்க.

சாந்தோக்கியம் பிரபா. 5. கண்டம் 3.

"𑌯𑌥𑍇𑌯𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿"

என்ற சுருதி முன்னர் ஆரியப்பிராமணர் அறியாதிருந்த ஞானத்தைப் பாஞ்சாலநாடாண்டிருந்த தமிழரசனாகிய பிரவாகநசைவலி கௌதமருக் குபதேசித்தனனென்றுணர்த்தலும், வடமொழி வேதங்களில் தமிழ்முனியாகிய அகத்தியர் சரித்திரம் மிகக்காணப்படலும், அகத்தியர் மனைவி வேதத்திற் சில பகுதிக்கு ஆக்கியாளாயிருத்தலும், பிரபலங்கூறும் வேதம் சதசதப் பிராமணத்திலும், அதற்குப்பிருமணமாகிய பாரதம், பாகவதம், லிங்கபுராண முதலியவற்றிலும் கூறப்படும் மநு திராவிடராஜன் என்னப்படலும், "மநுமொழிந்ததெல்லாமருந்து" = (𑌯𑌦𑍍𑌵𑍈 𑌕𑌿𑌞𑍍𑌚 𑌮𑌨𑍁𑌰𑌵𑌦𑌤𑍍𑌤𑌦𑍍𑌭𑍇𑌷𑌜𑌂) என்று வேதத்தில் கூறப்படலும், மணலூர் புரம் முதலிய தமிழ்ப்பெயர்கள் வடமொழிப்பாரத முதலிய நூல்களில் காணப்படலும், மந்திரபாகங்ளில் தமிழ்க்குரிய ளகரங் காணப்படலும், வடவாரியர்க்குச் சொந்தமான எழுத்தின்மையால் அவர் இந்தியாவுக்கு வந்தபின்பியற்றிய நூல்கள் நெடுநாள் எழுதா மறை எனப்பட்டுப் பின்னர்த் தமிழ்ப் பழைய எழுத்தாகிய வட்டவெழுத்திலிருந்து நாகரவெழுத்தையும், புதிய எழுத்தாகிய தமிழெழுத்திலிருந்து கிரந்த எழுத்தையும் படைத்து அவற்றில் வடமொழி நூல்களை எழுதியிருத்தலும் தமிழ்நூற்றொன்மையையும் மேன்மையையும் நன்குவிளக்கும்.

தமிழ்த் தொன்மையைப்பற்றி இந்திய புத்தசரித்திரம் (Buddhist India) என்ற ஆங்கில நூலாசிரியர் கூறியனவும், வி.கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் தமிழ்மொழிவரலாற்றில் வடமொழிக்கலப்பு என்ற அதிகாரத்தில் பல அரிய நுண்பொருள்கள் தென்மொழியி

னின்று வடமொழிக்கு வந்தமையைப்பற்றிக் கூறியிருத்தலும் இத னை யாதரிக்கும். சுமார் 3000-ஆண்டுகட்கு முன்னர்ப் பாஸமகாகவி யா லியற்றப்பட்டதென்று கூறப்படும் நாடகங்களுள் முக்கியமான ஸ்வப்ன வாஸவதத்தம் என்பது தமிழரசனாகிய உதயணன்காதையை ஆதாரமாய்க்கொண்டு வத்ஸராஜன் என்ற பெயர்தந்தெழுதப்பட் டுளது. சங்கீதரத்னாகரத்தில் தமிழ்த் தேவாரப்பண்கள் எடுக்கப்பட் டுள்ளன. தமிழ்ப் பெரியபுராணம் வடமொழியிற் பெயர்க்கப்பட் டுள்ளது. இவை முதலியன அவர் கூற்றுக்களுக் குதாரணங்களாம்:

திருமூலர். "செப்புஞ்சிவாகமமென்னுமப்பேர்பெற்று
அப்படி நல்குமருணந்திதாள்பெற்றுத்
தப்பிலாமன்றிற்றனிக்கூத்துக்கண்டபின்
ஒப்பிலெழுபதுகோடியுகமிருந்தேனே."

என்று கூறுகின்றனர். யுகத்தை ஓராண்டாகக் கொள்ளினும் எழுபது கோடி ஆண்டாகின்றன. ஆதலால் சிவநெறிமுதற்கண்ணுலகிற்றோன் றிய காலம் வரையறுக்கக்கூடாததாயிருக்கின்றது. மிகச் சுருங்கிய தற்காலக் கணக்கை வைத்துநோக்கில் மேற்கூறிப் போந்தவற்றால் 12000-ஆண்டுகட்கு நெடுநாண் முன்னரே தமிழ் சீர்தேற்றமடைந் திருந்ததென்றும் தலைச்சங்ககாலந்துவக்கிச் சைவசமயமிருக்கிறதென் றும், சைவசமயத்துக்குப் பாண்டிநாடே பழம்பதியென்றும், இச் சைவம் தமிழினின்றே ஏனையமொழிகளுக்குச் சென்றதென்றும் விளங்குகின்றது.

முன்னர்ச் சென்னைக்கவர்னராயிருந்த சர் கிரான்ட்டப்பிரப் ஒரு நாட் பிரசங்கத்தில் "தமிழின் தொன்மையின்முன் ஆரியர்களுடைய தொன்மை சற்றுநேரத்திற்குமுன் வந்த ரூட்டர்த்தந்தியொக்கும்." என்றதும் சென்னை ஐகோர்ட் ஜட்ஜ் திவான் பகதூர் பிரம ஸ்ரீ சதா சிவையரவர்கள் சென்னை மெய்கண்ட சந்தானசபையிற்செய்த பிரசங் கமும் இக்கருத்தை ஆதரிக்கும்.

சைவசமயக்கருத்து.

நமது இந்திரியங்களுக்கும் அறிவுக்கும் புலப்படும் பொருள்கள் மண், நீர், தீ, காற்று, விண், கதிரவன், மதி, ஆவி, என எட்டுப்பொ

ருள்கள். அவற்றில்முன்னேழும் அசேதனமும் ஆவி சேதனமுமாம். எல்லா உலகங்களும் கதிர்மதிகளும்பௌதிகவடிவங்கள். உலகத்துள்ள இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களின் வியப்பான அமைப்புகளையும், ஒன்றுக்கொன்று பயன்படு நலத்தையும் உற்று நோக்குவார்க்கு அவற்றை முற்றுமோர்ந்தியற்றுவா ரொருவ னுள னென்று தோன்றுமற்போகாது. புகைகண்டுழி நெருப்புண்டென உணர்தல்போல அதிவிசித்திரமான உலகப்படைப்பை நோக்குழிப்படைப்பான் ஒருவன் உளன் என்றுகருதலளவையாற் கொள்ளப்படுகின்றது. ஆங்கிலதத்துவ சாத்திரியாகிய ஹெர்பர்ட் ஸ்பென்சரும் (Herbert Spencer)அறிவுள்ள மூலகாரணமொன்றுண்மை மெய் என்கின்றனர். கடவுள்எல்லாவல்லமையும் எல்லா அறிவுமுடையர் எங்கும்நிறைந்தவரென்பது கொஞ்சங்குறைய எல்லா ஆத்திகரு மொப்பிய வுண்மை. வியாப்பியப்பொருள்களில்லாவிடில் வியாபகனுங்கிடையாது. ஆதலால் சேதனு சேதனப்பிரபஞ்சங்கள் வியாப்பியமும் கடவுள் வியாபகனுமாம்.

எங்கும் நிறைந்தவனாகிய சிவன்பதி. அவனை அளவைகளானும் அறிவானும் அறியும் சேதனன் ஆன்மா. அவர் ஆணவம், மாயை, கன்மமென்னும் மும்மலங்களில் 1. 2. 3. மலங்களுடைமையால் முத்திறப்படுவர். ஆன்மாக்கள் கன்ம வேற்றுமையால் பற்பல பிறப்பிறப்புகளடைந்து சுழலுமெண்ணிறந்தவர். ஆவிகளின் கன்மங்களுக்கேற்பத் தனுகரண புவன போகங்களாயுதவுவது மாயை, அல்லது பாசம். அது, சுத்தமாயை அசுத்தமாயை என்றிருவகைப்படும். மேற்கூறிய கடவுள், ஆவி, மாயை, என்ற முப்பொருள்களும் அநாதி நித்யம். கடவுள் எல்லா ஞானமும் எல்லாவல்லமையும் எல்லா நல்ல பண்புகளும் இரக்கமும் உடையன். இயல்பாகவே பாசங்களின் நீங்கிய இன்பவடிவன். எங்கும் நிறைந்த ஒருவன். ஆன்மாக்கள் சேதனராயினும் செம்பிற் களிம்புபோன்றுள்ள ஆணவமலத்தால் இச்சாஞானக்கிரியாசத்திகள் மறைக்கப்பட்டு இருட்டுவீட்டிற் குருட்டுக் குழவிபோல அநாதி கேவலத்திற் கிடக்கின்றன. அவ் வான்மாக்களுக்கு இறைவன் அவற்றின் இச்சை கன்மங்களுக்குரிய தனுகரண புவன போகங்கள் தந்து அதனால் அறிவு முதிர்ந்து பரிபாகமெய்தி வீடுபெற்றுத் தன்னைப்போலப் பேரின்பநுகர்ந்திருக்கச் செய்கின்றனன்.

அவனொருவனே சர்வலோகங்களையும் படைத்தளித்தழிப்பவன். உலகில் இல்வழக்கினர் (நாத்திகர்) நான்கு பூதங்களின் சேர்க்கையானும் அவற்றின் மிகுதி குறைவானும் உலகம் தோற்றம், நிலை, இறுதியடைகின்றன வென்கின்றனர். பிரதான காரணவாதிகள் பிரதானமாகிய மாயையே ஜெகத்காரண மென்கின்றனர். காலவாதிகள், காலமே காரணமென்கின்றனர். சுபாவவாதிகள் இயற்கையே காரணமென்கின்றனர். அவையனைத்துஞ் சடமாகையால் அவற்றுக்கு அறிந்தியற்றுங் காரணத்தன்மை பொருந்தாது. அறிவுள்ள ஜீவான்மாவைக் காரணமென்பதும் தனக்கெனச் சுவாதீனமின்றிச் சுகதுக்கமடைதல், தன் எண்ணத்தாற் பிறப்பிறப்படையாமை, உலகிலொன்றைப் படைத்தல் காத்தல் அழித்தல் வன்மை தனக்கில்லாமை, சிற்றறிவு சிறுதொழில் சிறுதன்மையுடைமை முதலியவற்றானும் பிறவற்றானும் பொருந்தாது. சர்வ ஆன்மகோடிகளையும் அறிவுக்கு அறிவாய் நின்றறிவித்தியக்கும் அந்தரியாமியாகிய ஒருவனே தெய்வம். அவனைப் பற்பலமதத்தரும் மொழியாளரும் வெவ்வேறு பெயராற் கூறுகின்றனர். பகலைச்செய்யும் கதிரவனை வடமொழியார் சூரியனென்றும், ஆங்கிலேயர் சன் (Sun) என்றும், இந்துஸ்தானியார் சூரஜ் என்றும், இலத்தீனர் சோலர் (Solar) என்றும் இன்னும் பலமொழியாளர் பலவாறு கூறினும் குறிக்கப்படும் பொருளொன்றேயாவதுபோல எம்மதத்தவர் எப்பெயராற் றெய்வத்தைக் கூறினும் குறிக்கப்படுதெய்வ மொன்றேயாம். ஒரு பொருளின் ஒவ்வொரு பெயரும் அப்பொருளின் இயல்பிலொன்றையே குறிக்கின்றமைபோலக் கடவுள் ஒவ்வொரு நாமமும் அவன் கல்யாண குணங்களிலொன்றையே குறிக்கின்றது.

சுவே. 4. 19.

𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮 𑌮𑌹𑌦𑍍𑌯𑌶𑌃। எவன் பெயர் (அவன்) பெரிய புகழ்

கூர்மபுராணம்.

"[illegible] ।
[illegible] ॥

(இ - ள்.) எல்லாவற்றையும் அழிப்பதால் அரன் என்றும், வியாபிப்பதால் விஷ்ணுவென்றும், எல்லாவற்றையும் அறிவதால் சர்வக்ஞன் என்றும், ஓம்புதலால் ஓம் என்றும் கூறப்படுகின்றனன்.

பிள்ளைகள் நெடுங்கணக்குப்படித்துப் பின்னர் முதற்பாடம் இரண்டாம் பாடம் முதலிய ஏடுகள்படித்து மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்குரிய பாடங்கள் படித்துத் தேறிப் பின்னர் பி. ஏ. எம். ஏ. முதலிய பரீக்ஷைகளுக்குப் படித்துத்தேறி ஆசிரியராதல்போல வெவ்வேறு கீழ்ப்படி மதங்களைப்பற்றி அவ்வவற்றிற் பெறத்தக்க அறிவடைந்து பலஜன்மங்களில் சித்தசுத்தியடைந்து சிவஞானமெய்தி முத்தியடைவர்.

எம். ஏ. பரீக்ஷயிற் றேறுதற்கு ஒவ்வொரு வகுப்புப் பாடங்களும் எப்படித் தள்ளத்தகாத அத்தியாவசியமும் பயன்படத்தக்கனவுமாகுமோ அப்படியே ஒவ்வொரு மதங்களாகிய சோபான மார்க்கங்களும் தள்ளத்தகாத பயனுடையனவேயாம். ஆதலால் கன்மபரிபாகத்தால் பலதிறப்பட்ட அநந்தகோடி ஜீவர்களுக்குபயோகமாம்படி உலகிற் பல்லாயிர மதங்களிருக்கப்பரமன் கற்பித்திருக்கின்றனன். ஆதலால் ஒருமதமும் எள்ளத்தக்கதன்றென்று கருதி அறிவதே அறிஞர் முடிவு. சைவசித்தாந்தத்தின் உண்மைத்துணிவுமஃதே.

திரு. நா. தேவாரம்.

விரிவிலாஅறிவினர்கள்வேறொருசமயஞ்செய்தே
எரிவினாற்சொன்னாரேனுமெம்பிராற்கேற்றதாகும்.

சிவஞானசித்தியார்.

யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே
மாதொருபாகனாரேவந்தருள்புரிவர்.

சாந்தோக்கியம்.

"யதாயதோபாஸதே ததேவ பவதி" "எப்படி எப்படி யுபாசிக்கின்றனன் அப்படியே ஆகின்றனன்."

திருவாய்மொழி "தமருவந்த தெவ்வுருவவ் வுருவந்தானாய்த்—தமருவந்தவெப்பே ரப்பேர்—தமருவந்த—தெவ்வண்ணஞ் சிந்திப்பதியையாதிருப்பரேல்—அவ்வண்ண மகிழ்வோனும்."

என்ற சுருதிகளுமவ்வுண்மையை வற்புறுத்துகின்றன. ஆதலால் மதத்துவேஷங்களை யொழித்தல் நமதுகடமையேயாம்.

எக்காலத்தும் எவ்விடத்தும் எந்தத்தொழில் செய்யும் பொழுதும் பரமேசுரனைத் தியானித்தலும் எல்லா உயிர்களையும் தன்னுயிர் போலெண்ணி அவைகட்கு நன்மைபுரிதலும் தீமைசெய்யாமையும் சைவர்க்கு இன்றியமையாத செயல்களாம். படித்தவர்களும் பெரிய உத்தியோகமுஞ் செல்வமு முடையவர்களுந்தாம் கடவுளை வணங்கலாம் எளியவர்களுக்குப் போதுமான அவகாசமின்மையால் அவர் கடவுள் தியானஞ்செய்ய முடியாதென்றெண்ணற்க. மனஉழைப்புடையரைக்காட்டிலும் தேக உழைப்புடைய வேலைக்காரர்க்கு அவகாசமுண்டு. உதாரணமாக மூட்டை சுமப்பவன் எனது பாவச்சுமை, அஞ்ஞானச்சுமைகளை ஒழித்தருளவேண்டுமென்று தியானித்துக்கொண்டு செல்லலாம்: அதனுல் தெய்வபக்தியுண்டாவதோடு பாரந்தெரியாமையுமுண்டாம். மண்வெட்டுபவன் இவ்வாறு என் ஆணவம் தீயகன்மங்களை வெட்டியொழிக்க வேண்டுமென்று தியானித்துக்கொண்டு வெட்டலாம். குப்பைதூர்க்கிறவன் இவ்வாறு என் பாசக்குப்பைகளை விலக்கவேண்டுமென்றும், கரிச்சட்டிகழுவுபவன் இவ்வாறு என் அஞ்ஞானக் கரியைக் கழுவவேண்டு மென்றும் கடவுளைத் தியானிக்கலாம். மன உழைப்புடையவன் அவன் தொழிலை நிறுத்தி யொருதியானத்தில் மனதைச் செலுத்தவேண்டும். உடல்வேலைசெய்பவன் வேலைசெய்யும் பொழுதே மனதில் கடவுளைத்தியானிக்கலாம்.

சிவன் எல்லா உயிர்களினும் நிறைந்த அந்தரியாமியாதலால் உயிர்களனைத்தும் அவன்கோவில் ஆதலால் அவன் வீற்றிருக்குங் கோவிலுக்கு எவ்வாற்றானும் இடுக்கண் விளைத்தல்கூடாது. இக்கருத்தானே பிறவுயிர்கொன் றூன்தின்னலைச் சைவநெறிமறுக்கின்றது.

திருநீறு.

திருநீறு, கண்டி இரண்டும் சிவசின்னங்களென்னப்படுகின்றன. சர்வபிரபஞ்சங்களையும் இறுதியில் சங்கரித்து எல்லாமொடுங்கிய காலத்தில் எஞ்சிநிற்பவன் சிவன் ஒருவனே.

ஆதலால் திருநீறு சர்வசங்காரக்கடவுளை நினைப்பூட்டுகின்றது. திரிபுண்டரமாகத் திருநீறிடும்பொழுது மும்மலங்களையும் நீற்றி யிவ்வாறு நீறுக்கவேண்டுமென்று நினைந்து ஐந்தெழுத்தை யோதி முறைப்படி திருநீறிடவேண்டும்.

திருநீறு மும்மலங்களையு மொழித்து ஆயுளும் செல்வமும் அறிவும் கொடுக்குந்தன்மையுடையது. வைத்தியமுறையாய் நோக்கில் விபூதி உத்தூளநம், அவகுண்டநம், (நீர்கலந்து உடலிற் பூசல்) திரிபுண்டரம் என்ற தாரணங்கள் உடம்பிற்படும் நோய்ச்சிற்றுயிர் தொற்றுநோய்ச்சிற்றுயிர்களையும் கொல்லும். உட்கொள்ளும் பூதி வாயினுட் சென்ற புழுக்களைக்கொல்லும், புழுக்களால் உண்டாம் நோய்கள்வாராமற்காக்கும். உதாரணமாக வித்துக்கள் புழுக்காமல் அல்லது உளுக்காமல் சாம்பல் சேர்த்துவைத்தலும் புழு அசுகணி உண்டாகிய அவரை, புடல், பீர்க்கு முதலிய படர்கொடிகளில் சாம்பல் தெளித்தலும் அவை நீங்கி நல்லபலன்றரலும், வாராமற் காத்தற்கும், வந்தபின் நீக்கற்கும் சான்றுகளாம்.

கண்டிகை.

ருத்திராக்ஷம் மகா உருத்திரனது கண்போன்றது. அவற்றை யணிந்துகொள்வதுநம்பால்அவனருட்கண் பெறவேண்டுமென்பதைக் குறிக்கின்றது. கண்டியின் தாரணத்தால் தேகசுகமும் நல்லறிவும் செல்வமும் சிவனருளுமுண்டாம். வைத்திய முறையாகநோக்கில் கண்டியில் உயிர்ச்சாரசக்தி (Human Magnetism) உளதால் அதை அணிவார்க்கு உயிர்ச்சாரசக்தி மிகுத்து தேகத்துக்கும் மூளைக்கும் பலமுண்டாகி ஆயுளும் நீளும்; இரத்தசுத்தியும் நோய்நீக்கமும் உண்டாம். உதாரணமாகப் பலவிடங்களில் மகம்மதியரும், கிறித்தவரும் கூடச் சிலநோய்கள் வாராமற்காத்தற்கும் நீக்கற்கும் ருத்திராக்ஷத்தை ரக்ஷாபந்தனம்போலக் குழந்தைகளுக்குக் கட்டிவருகின்றனர்: நல்லபலனையுமடைகின்றனர். வைத்தியர் ஜன்னி நாவறட்சி மயக்க முதலியவைகளுக்கு அதனால் கண்டாவிழ்தஞ்செய்து கொடுத்து நல்லகுணங் காண்கின்றனர்.

இவ்விரு தாரணங்களுடையாரைக் காணுந்தோறும் அவற்றைத் தரிக்கும் தோறும் தெய்வநினைப்புண்டாவதும் பாராட்டத்தக்கதே.

ஐந்தெழுத்து.

இச்சைவசமயம் ஒரு ஜாதியார் அல்லது தேசத்தாருக்குரிய தன்று. மனித ஜாதியார் அனைவர்க்கும் பொது. அருபத்து மூன்று நாயன்மார்களின் வகுப்புக்களைக் கருதினால் அவ்வுண்மை விளங்கும். கடவுளை அடையும் நன்னெறிகள் சிலர்க்குரியன வென்றும் சிலர்க் குரியனவன்றென்றும் கூறல் எவ்வளவறியாமை. கடவுட்குரிய அள வில் பெயர்களில் சிவன் என்பது எங்கும் நிறைந்தவன் என்று குறிக் கின்றது.

அது நெடுநாட் பலரால் தழுவப்படலாலும் தென்மொழி வட மொழி மறையாகமங்களிலும், வழக்கிலும் சிறந்து வழங்கப்படுகின் றது. பிற்காலத்து நமச்சிவாயன் என்ற பெயரும் வழங்கியது. அப் பெயர்களிரண்டும் ஐந்தெழுத்தென்றே கொள்ளப்படுகின்றன.

தேவாரம்.

"பாத்திரஞ்சிவமென்று பணிதிரேல்"
"வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாத னாம நமச்சிவாயவே"

என்ற சுருதிகள் அக்கருத்தை விளக்குகின்றன.

அடியர்வணக்கம்.

மக்கள் அனைவரும் சிவபிரான் பிள்ளைகள் ஆதலா லவ்வனைவரை யும் நாம் உடன் பிறந்தாராய்க் கொள்ளல் வேண்டும். அவருள்ளும் சிவபக்தர் யாவராயினும் அவர்பால் நாம் மிக்க அன்புசெலுத்த வேண் டும். இக்கருத்தை,

திரு. நா. தேவாரம்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
மாதேவர்க் கேகாந்த ரல்லராகின்

அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா
யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராயி
னவர்கண்டீர் யாம்வணங்குங் கடவுளாரே.

முண்டகோபநிஷத்.

“சண்டாலஶ்ஶ்வபசோவா சிவ இதிவாசம் வதேத்
தேந ஸஹ ஸம்வதேத் தேந ஸஹ ஸம்வஸேத்
தேந ஸஹ புஞ்ஜீத”

(இதன் பொருள்) சண்டாளனாயினும் சிவனென்ற சொல்லைச் சொல்வானானால் அவனோடு பேசுக. அவனோடு இருப்பாயாக. அவனோடு உண்பாயாக. என்றல் முதலிய சுருதிகள் விளக்குகின்றன.

இதுகாறுங் கூறியவாற்றால் சைவசமயம் தமிழ் நாட்டில் 12000 ஆண்டுகட்கு முன்னரே தோன்றியுளதென்றும், அது எல்லாருக்கும் பொதுவாம் ஞானமதமென்றும், உலகு உயிர் தெய்வம் என்று முப்பொருள்களுள, உயிர்கள் ஜாதி மத வேற்றுமையின்றி அவர் புரியும் நன்மை தீமை உபாசனைகளுக்குரிய பலனை அடைவர், நாம் கடவுளை நம்பி நன்னெறியிலொழுகி அவனை வழிபடல் வேண்டும், தன்னுயிர்போ லெவ்வுயிரினிடத்தும் அன்புசெலுத்தவேண்டும், விபூதி ருத்திராக்ஷ தாரணம் பஞ்சாக்ஷரஜெபம் ஜீவகாருண்யம் சைவத்துக்கு முக்கிய சாதனங்கள் என்றும் நன்கு விளங்குகின்றது.

இன்று சிவபிரான் பிரபாவங்களை யான் சொல்லவும் நீங்கள் கேட்கவும் அருளிய திருவருளைப் பன்முறை வணங்குகின்றேன்.

நம:பார்வதீபதயே

இங்ஙனம்

ஒருசைவன்.

ஸ்ரீ:

NOV 1916

*வெள்ளூர்ச் சாசநங்கள்

—————:o:—————

I. "மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 8-வது வருஷம்"
சுவாமி ஆழியங்கைப்பெருமாள் கர்ப்பகிருகம் மேல்பக்கம் மேற்றட்டுப் பட்டியல்.

. . . .

ஸ்வஸ்திஸ்ரீ॥ சீ கோமாரபந்மரான திரிபுவனச சககரவததிகள சீ குலசேகரதேவறகு யாணடு அ-வது ஜேஷ நாயறறு உயகஉ யும வ-றிறவ பகக (தது) ஷஷ்டி (யு) ம வெ (ள) ளிககிளமையும பெறற பூசததுநாள திருவழுதிவளநாடடு திருககுருகூா திருசசஙகணிததுறை (இனித் தென்புறம் மேல்தட்டு மேல்வரி:)......................... எமபெருமாறைககு அததியன பிராகளாக நெடடூருடையான......... மூவரான உடையாா காலிஙகராயா வைதத அகரம ஸ்ரீராமாநுச சதுவெதி மஙகலததில படடாகள போ இருபதது நாலுககு இறையிலி ....டடு வேளூரான மதுரோதயபுர+மழவராயநலலூா...... மடவா. (மேல்பக்கம் 2-வது வரி) லபபுரவு நிலம பதினைஞசுமாவு மிபபாடடததிலுள மரஙகளுமிப படடாகளுககு இறையிலியாக வரி யில கழிதது கலலிலும செமபிலும வெடடிககுடபடதெனறு பி (ர) சாதஞ செ (ய) தருளிய திருமுக (ப) படி நிலம பதினைஞசுமாவும திருநகரியில பொலிஞசுநினறபிரான கோயிலில உடையாா (தென்புறம் மேல்தட்டு 2-வது வரி) உகநதருள பணணிந நாசசியாறகு திருவுடையாடடமாக திருமுகபபடி குள (ப) புரவு முககாணி—நூறு அசசும பாடு நி (?) கலமஞசுபிரவும திருமுகபபடியும நியோகபபடியிலேயும கரஙகளும.............ஙக வறககததாரும........................யஜ்ஜ ாாந இறையிலியாக இநில........ ...ந ஸஹேஸ்வ்ராஷ்டிகளுமனுஸவிபடா ராகக கலலில வெடடிககுநிததோம உளராரோம.

---

* இவ்வூர் ஆழ்வார் திருநகரிக்கு மேற்கே 4 மைல் தூரத்திலுள்ளது. புத்தர்கள் இருந்த விடமாகத் தெரிகிறது. இவ்வூரிலிருந்த புத்த விக்கிரகமொன்று இப்போது சென்னைக் காட்சிச்சாலையிலிருக்கிறது. இவ்வூர் வேளூர் எனவும் வழங்கும்.

II. தென்புறம் கீழ்த்தட்டு

ஜடாவர்மன் குலசேகர தேவர்க்கு 13-வது ஷ

1. ஸ்வஸ்திஸ்ரீ கோசசடைய பனமரான திரிபுவன சககரவததி களஸ்ரீ குலசேகரதேவறகு யாணடு ௰௩ எதிர பனனிரணடாவது திருவழுதிநாடடு வெளளூரான மதுரோதயபுரதது கமபிததுண (?) விணணகா எமபெருமான ஆழியஙகைப பெருமாளுககு இனனகரதது வேளானபபனனதிருக..
2. குருகூா விழுபபரையனேன இநத எமபெருமானுககு உகந தருளிவிதத ஸ்ரீ பூமிபபிராடடிககு திருபபடி மாறறு சநதிராதிதத பகற செலவதாக நகரததாா பககல நான விலைகொணடு ஸ்ரீ பூமிப பிராடடிககு நீரவாததுககுடுதத நிலமாவது. பெருமபுளிபபணணைக கடுககை சூழவயகலும ஸ்ரீ சடகோபபபேரேரி உடைபபுவயககலும இவவிரணடு பறறுககும நகரததாா நாடடின எலலைததிருவாழிககல லுககுளபடட நிலததுககுக கடமை இறையறுதியாக நகரததாா திருபபடி மாறறுககு செலவதாக திருபபடியிலேய நீரவாதது சநதி ராதிததபகல செலவதாக எனககு நகரததாா விறறுததநதபடியே கலவெடடிககுடுதத இன நகரதது வெளளான அபபனுனன திருக குருகூா விழுபபரையன எழுதது.

III மேல்புறம் கீழ்த்தட்டு.

1. ஸ்வஸ்திஸ்ரீ॥ எமமணடலமுஙகொணடருளிய ஸ்ரீகுலசேகரதே வறகு யாணடு ௰௪-வது ஆடிமாதம ௰௧ ஞதிருவழுதிவள நாடடு வேளூரான மதுரோ உதயபுரதது நகரததோம...........................
2. நமமூா உபையபெருகதியதிருட (?) கரைதைசசதரததினபடி யும ஸ்ரீ சடகோபபபேரேரியில முககாணிககூறும.............பாடும தைசசதரததினபடியும சநதிராதிததவறறதுவே கரையாக நமமில மைநதமைககு

(இத்துடன் நின்றுவிட்டது.)

A. M. சடகோபராமாநுஜாசார்யன்,

திருச்சிராப்பள்ளி நாஷநல் ஹைஸ்கூல்.

திருமந்திரம்.

தேவர்குறளுந்திருநான்மறைமுடிவும்
மூவர்தமிழும்முனிமொழியும்—கோவை
திருவாசகமும்திருமூலர்சொல்லும்
ஒருவாசகமென் றுணர்.

என்று ஆன்றோரால் விதந்து கூறப்பட்ட நூல்களுள் ஒன்றாகிய திருமூலர் மந்திரம் முன்னும் பலரால் அச்சிட்டு வெளியிடப்பட்டதாயினும் அவர்பதிப்புக்களெல்லாம் சுத்த பாடமெனக் கொள்ளத்தகாதனவாயின.

திவ்வியாகமசாரமாகிய திருமந்திரம் சொரூபந்திரியின் அதனால் வரத்தக்க ஏதம் பெரிதாமன்றோ. அதனையுணர்ந்த தமிழ்ப்பண்டிதர் மாவை, வே. விசுவநாதபிள்ளையவர்கள் பல்லாண்டுகளாகப் பல பிரதிகள்தேடி அறிஞருதவி கொண்டாராய்ந்து வழுக்களைந்து சுத்தபாடஞ் செய்து நல்லபதிப்பாக அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார்கள். அவர்கள் செய்த இப்பரோபகாரம் தமிழ்நாடு என்ஞான்றும் மறக்கற்பாலதன்று.

தமிழ்நாடுய்யுமாறு திருமூலர் வாயிலாகப் பரம கருணாநிதியாகிய சிவபெருமான் தமிழிலே ஆகமசாரத்தைத் திருமந்திரம் என்னும் பெயரினாலே அருளிச்செய்தனர். தமிழ்வேதத்தை நால்வர் வாயிலாக அருளிச்செய்தனர். தமிழிலே வேதாகமங்கள் இல்லையென்று தமிழ்நாடு ஏங்காவண்ணம் அருளிச்செய்யப்பட்ட நூல்களுளொன்றாகிய திருமந்திரம் முத்திசாதன நூலாகவும் அதனை இதுகாறுஞ் சுத்தப்பிரதிசெய்யாது வழங்கிய தமிழ்நாட்டாருக்கு இப்போது சுத்த பாடமாக்கிக் குறிப்புரையோடு அச்சிட்டு வெளியிட்ட பரோபகாரத்தினும் சிறந்த புண்ணியம் பிறிதில்லை யென்றே கூறல்வேண்டும்.

இந்நூலை இவ்வாறச்சிட்டு வெளியிடுதற்குத் திரவியோபகாரஞ் செய்த பிரபு சிகாமணிகளும் சிவஞானச் செல்வர்களுமாகிய திவான் பஹதூர், சர், எஸ். சுப்பிரமணிய ஐயவரவர்கள், ஸ்ரீமாந் கௌரவ: பொ. ராமநாதன் அவர்கள், ஸ்ரீமாந்: மெ. அரு. நா. ராமநாதச்செட்டியாரவர்கள், ஸ்ரீமாந்: மெ. அரு. அரு. அருணாசலச்செட்டியாரவர்கள், ராவ் பஹதூர்: கே. வைத்தியலிங்கம்பிள்ளை யவர்கள் முதலியோரது பெரு வண்மையும் வண்மையாக மதிக்கத்தக்கது.

மந்திரப் பாசுரங்கள் தோறுமுள்ள அரும்பதங்களுக்கும் புதை சொற்களுக்கும் பொருள் நன்றாகக் கூறப்பட்டிருக்கின்றன. சித்தாந்த பானுவாய்ப் பரசமய விருளகற்றத் திருமறைக்காட்டில் அவ

தரித்து விளங்கும் பிரமஸ்ரீ: ரமணசாஸ்திரிகள் M. A. அவர்கள் இந்நூலுக்கு எழுதியிருக்கும் நூன்முகத்தேயுள்ள விஷயங்கள் யாவருள்ளத்தையுங் கொள்ளை கொள்ளத்தக்கன.

இப்பதிப்புச் சிறப்பைத் தமிழ்த்தலைமைப் புலமை பூண்டு விளங்கும் பிரமஸ்ரீ: உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள் பாயிரத்தாற் பாராட்டியுள்ளா ரென்னில் நாம்புகழ்வது மிகையாம்.

இந்நூல் டெமி எட்டாகமடித்த 700 பக்கங்கொண்டது. அச்சுவனப்பும் கட்டுச்சிறப்பும் கண்ணைக்கவருமியல்பின விலை ரூ 3-8-0 வேண்டுவோர் சென்னை ரிப்பன் அச்சுச்சாலையிற் பெற்றுக்கொள்க.

யாழ்ப்பாணம்,
நாவலர்கோட்டம்.
20—1—13.

இங்ஙனம்,
ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

உ

புத்தக வரவு.

—:o:—

வியாசங்களும் உபந்நியாசங்களும்:—இப்புத்தகம் மகிபாலன் பட்டி ஸ்ரீமான் மு. சின்னையா செட்டியாரவர்களால் எழுதப்பட்டுப் பல பத்திரிகைகளில் வெளியிடப்பெற்ற வியாசங்களும், அவர்கள் பல சபைகளிற் பேசிய உபந்நியாசங்களும் அடங்கியுள்ளது.

இதனுள் கல்வி, ஆசாரச் சீர்திருத்தம், பொதுவான சிலநீதிகள் முதலிய உலக நடைக்கநுகூலமான பலவிஷயங்களும் தமிழ்மக்கள் எல்லோர்க்கும் விளங்கும்படி இனிமை வாய்ந்த தெளிவான தமிழ் நடையிலெழுதப்பட்டிருக்கின்றன. தொன்றுதொட்டு விதிவழியொழுகிவரும் சில வொழுக்கங்களையும் இக்காலத்துக்கிணங்க மாற்றிக் கொள்ளவேண்டுமென்பது பற்றி யெழுதியுள்ள சில வியாசங்களுமுள்ளன. அவை, ஒவ்வொரு வகுப்பினருள்ளும் கல்வி, அறிவு, ஒழுக்கம், குடிப்பிறப்பு, செல்வம், முதலிய பலவகையாலும் மேம்பட்ட பொதுக்கூட்டங்களின் அங்கீகாரத்தாற் பயன் பெறவேண்டுமாயினும், அக்கூட்டங்கள் கூடுதற்கும், அவர் பரியாலோசிப்பதற்கும் சாதகமாகுமென்பதிற் றடையில்லை. இத்தகைய புத்தகங்கள் இக்காலத்தில் மிகப்பயன்படத்தக்கன. இதன் விலை அணா 12.

☞ மேற்கண்டபுத்தகம் பாண்டியன் புத்தகசாலையில் வழக்கப்படி சேர்க்கப்பட்டது.

பத்திராதிபர்.